விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.
03-11-02

# வலம்புரி
# VALAMPURI

நந்தா
புடைவையகம் அன் பான்சி ஹவுஸ்
* ரெடிமேட் ஆடைகள் * ஸ்கேட் அன் பிளவுஸ் * சல்வார் கமீஸ் * நவீன டிசைன்களில் பலரக சாறிகள்
* ஜீன்ஸ் ஆனிகள் * அழகு சாதனப் பொருட்கள்
போன்றவற்றை பெற்றுக் கொள்ளலாம்.
யாழ்வீதி, மானிப்பாய்

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி17 ஞாயிற்றுக்கிழமை (03.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 319

## திருமலைக் கடலில் புலிகளின் படகை கடற்படையினர் நேற்று கைப்பற்றினர்

### ஆறு உறுப்பினர்களும் கைது

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலை கடற்பரப்பில் நேற்று அதிகாலை 2 மணியளவில் சம்பூர் நோக்கிச்சென்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் படகு ஒன்றை கடற்படையினர் ஆயுதங்களுடனும தொலைத்தொடர்பு சாதனங்களுடனும் கைப்பற்றியுள்ளதுடன் ஆறு விடுதலைப்புலி உறுப்பினர்களையும் கைது செய்துள்ளனர்.

கடற் படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் படகில் இருந்து 35 கிளைமோர் குண்டுகளும், மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

படகில் இருந்ததாகக் கூறப்படும் ஆறு விடுதலைப்புலி உறுப்பினர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு நேற்று திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது அவர்களை இம் மாதம் 15ம் திகதி வரை விளகக மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

திருகோணமலை கடற்பிரதேசத்தில் கடற்படையின் வழமையான ரோந்துப் பணிகளில் ஈடுபட்டிருந்த போது சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய படகொன்றை கடற்படையினர் மறித்து சோதனை இட்டபோது

(10ம் பக்கம் பார்க்க)

### வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

(கொழும்பு)

எதிர்வரும் ஆறாம் திகதி புதன் கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள அடுத்த வருட வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவுள்ளதாகவும், நாட்டின் அபிவிருத்திக்கு கூடியளவு நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் நிதி அமைச்சர் கே.என்.சொக்ஸி செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

நாட்டில்தற்போது நிலவும் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் வேலை வாய்ப்பை அதிகரிப்பது தொடர்பான ஆலோசனைகளும் வரவு செலவுத் திட்டத்தில் வெளியிடப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (ம)

### அபிவிருத்தி, பாதுகாப்புக் குழுக்கள் அமைப்பு

# தீர்வுத் திட்டம் தயாரிக்கும் குழுவில்

# பாலசிங்கம் - ஜீ .எல்.பீரிஸ் - ஹக்கீம்

(பாங்கொக்கில் இருந்து அன்ரனி ஜீவா)

**கூட்டுச் செயல்ணி என்ற பெயரில் குழு அமைப்பது என முன்னர் எடுத்த தீர்மானம் மாற்றப்பட்டு உபகுழுக்கள் என்ற பெயரில் அபிவிருத்தி , பாதுகாப்பு, இனப்பிரச்சினையை ஆராய்ந்து அரசியல் தீர்வு காணுதல் ஆகியன தொடர்பான மூன்று குழுக்களை அமைப்பதற்கு அரசு தரப்புப் பிரதிநிதிகளும் புலிகள் தரப்பு பிரதிநிதிகளும் நேற்றைய பேச்சுவார்த்தையில் இணக்கம் கண்டுள்ளனர்.**



அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் இடம்பெற்றுவரும் 2ம் கட்ட சமாதானப் பேச்சுக்களின் நேற்றைய நிகழ்வில் இத்தகைய குழுக்கள் அமைப்பதற்கான இணக்கம இரு தரப்பினருக்கமிடையேயும் காணப்பட்டுள்ளது.

இலங்கையின் இனப்பிரச்சினை எவ்வாறு தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும், இடைக்கால நிர்வாகம் எப்படி அமைய வேண்டும் என்பது தொடர்பாகவும் குறிப்பிட்ட சில நாடுகளுக்கு சென்று அங்குள்ள அரசியல் நிலைமைகளை அறிந்த ஆங்காங்கே நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களை அறிந்து இலங்கைக்கு ஏற்றவாறான தீர்வை அமைப்பதற்கு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய மூவர் அடங்கிய

(10ம் பக்கம் பார்க்க)



அமைப்பதற்கான இணக்கம் இருதரப்பினருக்கமிடையேயும் காணப்பட்டுள்ளது.

பட்ட சில நாடுகளுக்கு சென்று அங்குள்ள அரசியல் நிலைமைகளை அறிந்த ஆங்காங்கே நடைமுறையில்

சிரியர் ஜீ.எல்.பீரிஸ், அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய மூவர் அடங்கிய

(10ம் பக்கம் பார்க்க)

# பொதுத் தேர்தல் நடக்கும் பட்சத்தில் ஐ.தே.முன்னணியை புலிகள் ஆதரிப்பர்

## தாய்லாந்துப் பேச்சில் பாலசிங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

பகிரங்கமாகச் சமாதானச் செயற்பாடுகளுக்கு ஆதரவு தெரிவித்தாலும், பொ.ஐ.முன்னணியும் ஜனாதிபதியும் அதனைக் குழப் புவதிலேயே ஆர்வம் கொண்டிருப்பது பற்றிக் குறிப்பிட்டு, அதனை முறியடிப்பதற்கு அரசாங்கம் திட்டம் எதனையும் கொண்டுள்ளதா என்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ள விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவினர் அரச தூதுக்குழுவினரிடம் விசாரித்தனர் என்று அறியப்படுகிறது.

அவ்வாறு திட்டம் ஒன்று இருக்கும் பட்சத்தில் சமாதான நடவடிக்கைகளை பாதுகாக்கும் விதத்தில் அரசும் புலிகளும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளல்

(10ம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி உறுப்பினர் சாள்ஸ் வாள் வெட்டுக்கு இலக்கானார்

(மந்திகை)

ஈ.பி.டி.பி அமைப்பின் தென்மராட்சிப் பொறுப்பாளர் நேற்று முன்தினம் இர்வு வீட்டுக்குள் புகுந்த இனந் தெரியாதோரால் கடுமையாகத் தாக்கப்பட்டு, வாளால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டுள்ளார்.

தென்மராட்சிப் பொறுப்பாளர் சூசைமுத்து அலெக்சாண்டர் (சாளஸ்) (வயது 38) என்பவரே கடுமையாகத் தாக்கப்பட்டு வாள் வெட்டுக்கு இலக்கானவர் ஆவார்.

சம்பவ தினமன்று அல்வாய் தெற்கில் தனது உறவினர் வீட்டில் தங்கியிருந்த போது இரவு 11 மணியவில் வீட்டுக்குள் புகுந்த இனந் தெரியாத குழுவினர். மேற்படி அமைப்பின் பொறுப்பாளரை கடுமையாகத் தாக்கியதடன் வாளால்

(10 பக்கம் பார்க்க)

## பொ.ஐ.முன்னணி ஆட்சிக்குவந்ததும்

# பிரபாகரனுக்கு நீதிமன்றம் விதித்த தண்டனையை நிறைவேற்றும்

## கட்சிப் பேச்சாளர் சரத் அமுனுகம

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு உயர் நீதிமன்றம் விதித்துள்ள 200 வருடகால சிறைத் தண்டனையை தாம் ஆட்சிக்கு வந்ததும் அமுல்படுத்தவுள்ளதாக பொ.ஐ.மு.வின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இதற்குத் தாம் தயங்கப் போவதில்லை எனத் தெரிவித்த அவர் தமது ஆட்சியில் புலிகளுடனான பேச்சுக்களை தொடருவோம் என்று செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்புப் .பற்றிய அரசாங்கத்தின் பிரதிபலிப்பு எத்தகையது என்று அறிவதில் ஆர்வத்துடனிருப்பதாகவும்.அரசாங்கத்தின் பேச்சு

(10ம் பக்கம் பார்க்க)

# தலைமைக்குத் தெரியாமலே படகில் ஆயுதம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது!

## பாலா~கருணா தாய்லாந்தில் தெரிவிப்பு

(பாங்கொக்)

திருகோணமலைக் கடற்பிரதேசத்தில்ஆயுதங்களுடன் பிடிக்கப்பட்டவர்கள் மீது இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கலாம் என்று த்மிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் தளபதி கேணல் கருணாவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கலாநிதி அன்ரன பாலசிங்கமும் தளபதி கேணல் கருணா ஆகியோர் தாய்லாந்தில் இருந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கிளைமோர் கண்ணி வெடிகள் மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்களுடன் கடற் பிரதேசத்தில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலைப் புலிகளின் தலைமைக்குத் தெரியாமல் தன்னிச்சையாக நடந்துள்ளனர். எனவே அவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட வேண்டும் என்றுதெரிவித்துள்ளார். (ம)

# யாழ்ப்பாணம் மாநகரசபை

## 2003ம்ஆண்டுக்கான வழங்குனர்களையும் ஒப்பந்த காரர்களையும்

# பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப்பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள்/உற்பத்தியாளர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 29 11 2002ம் திகதிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருட்கள்

01. காகிதாதிகள், எழுதுபொருட்கள்.
02. அலுவலக உபகரணங்கள்.
03. மேல்நாட்டு மருந்து வகைகள், வைத்தியஉபகரணங்கள்.
04. சித்தமருத்துவ மருந்துகள், மருந்துகள்.
05. கோலவுடைத்துணிகள், யன்னல்துணிகள், ஏனைய துணிவகைகள்.
06. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற்பொருட்கள்.
07. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, கூரைத்தகடு, ஓடுகள் முதலியன)
08. தீந்தைகள், நிறந்தீட்டும்பொருட்கள் முதலியன.
09. கற்கள், மணல்கள்.
10. நீர்வழங்குபொருட்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன.
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள், துணைஉறுப்புக்கள்.
12. மின்சார இயந்திரப் பொருட்கள், மின்கருவிகள்
13. விறகு, தேங்காய் மட்டை, கிடுகுகள்.
14. எரிபொருள் உராய்வு நீக்கிகள், கிறீஸ்.
15. இரும்புப் பொருட்கள்.
16. பனை மரங்கள், சலாகைகள்.
17. நூலகங்களுக்குரிய நூல்கள்.
18. வாகனங்களுக்கான பற்றரிகள், ரயர், ரியூப், முதலியன.
19. தீராந்திகள், றீப்பைகள், பலகைகள்.
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கால்துடைப்பம், இழைக்கயிறு தேடாக்கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப்பிரிவுகளுக்கான கிருமிநாசினிகளும், மருந்துகளும்.
22. கணணிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோ பிரதி இயந்திரம்; கனன், சாப்வகைகளுக்கான உதிரிப்பாகங்கள்.

### சேவைகள்

01. அச்சிடுதல்.
02. தட்டச்சு இயந்திரம் திருத்தம்.
03. மோட்டோர் வாகனங்கள் திருத்தம்.
04. ரியூப் ஒட்டுதல்
05. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்.
06. ஏற்றியிறக்கல் வேலைகளுக்கும், பாரம் குறைந்த வாகனங்களும் வாடகைக்குவிடுதல் (சுத்திகரிப்பு வேலைப்பகுதி ஏற்றியிறக்கல் வேலைக்கு ரைக்டர் வாடகைக்கு விடல்)
07. கோலவுடை தைத்தல்.
08. மின் மோட்டர்கள், மின்விசிறிகள், ஜெனரேற்றர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்.
09. ஏற்றியிறக்கல் தொடர்பாக மாட்டுவண்டியை சேவைக்கு அமர்த்துதல்.
10. மின்கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல்.
11. இறப்பர் முத்திரை தயாரித்தல், புளக்தயாரித்தல்
12. வாகனங்கள் சேவிஸ் செய்தல்.
13. கணணி இயந்திரம், போட்டோ பிரதிஇயந்திரம் திருத்தம், சேவிஸ்செய்தல்.

கடிதஉறையில் இடதுபக்கமேல் மூலையில் 'வழங்கல்கள் சேவைகள் 2003ம் ஆண்டு' எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபால்மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்க வேண்டும்.

வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள், ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம். என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல் சேவைகளுக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை யாழ் மாநகரசபை கொள்வனவுபகுதியில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் பதிவுக்கட்டணமாக (ரூபா.250.00 -வற் ரூபா.50.00) ரூபா.300.00 பெறுமதியான காசுக்கட்டளை/தபால்கட்டளையை ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்றபெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பிவைக்க வேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் நானாவித இறைவரிக் கிளையில் நேரடியாக வேலைநாட்களில்செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவுசெய்யப்பட்டவர்களிடம் இருந்து கோரப்படும்.

கோரப்படும் பொழுது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும், அல்லதுஉரிய நேரத்திற்குப் பொருட்கள்/ சேவைகள் வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள்/ சேவைகள்வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

**இ. இராமலிங்கம்,**
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

மாநகரசபை
யாழ்ப்பாணம்
11.11.2002

(கி-5232)

# சமயபாடச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் தரம் 10, 11இல் சமய பாடத்தைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று இன்று காலை 9மணிக்கு யாழ். கல்விவலயகருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்று தொடங்கும் இச் செயலமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வு கொழும்பு தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்படுகின்றது. இதில் யாழ். மாவட்டத்தில் இருந்துதெரிவு செய்யப்பட்ட 60ஆசிரியர்கள் பங்குபற்றவுள்ளனர்.

(ந- 9)

# மருதங்கேணி பாலத்தை புலிகள் செப்பனிட்டனர்

(செம்பியன்பற்று)

சுமார் 10 வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாதிருந்த புதுக்காடு மருதங்கேணி வீதிப்பாலத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் அண்மையில் செப்பனிட்டு மக்கள் போக்கு வரத்துக்குவழி வகுத்துள்ளனர்.

வடமராட்சி கிழக்கை ஏனைய பிரதேசங்களுடன் இணைக்கும் ஒரேயொரு நுழைவாயிலாக இருந்து வந்த இவ்வீதியின் மேற்படி பாலம் கடந்த காலயுத்தங்களால் சேதமானமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி பாலத்தைதிருத்த வேண்டியதன் அவசியம் குறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு பலமுறை சுட்டிக்காட்டியும் நடவடிக்கை எடுக்கப்படாமை இங்கு குறிப்பிடத்தக்கது (உ-42)

# மீன் விற்கத் தடை

(சண்டிலிப்பாய்)

காக்கைதீவு கடற்கரைக்கு அருகாமையில் இயங்கி வரும் சந்தையில், காக்கைதீவுக் கடலில் பிடிக்கப்படும் மீன்கள் தவிர ஏனைய பகுதி மீன்கள் விற்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதி மீனவர்களின் நலன் கருதிசாவல்கட்டு கடல் தொழிலாளர் சங்கம் நேற்றுமுன்தினம் இந்நடைமுறையைக் கொண்டு வந்துள்ளது.

(உ- 258)

# வலி. கிழக்குப் பிரதேசசபை - நீர்வேலி

## 2003 ஆம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

01. கேள்விப் பத்திரம் வழங்கும்திகதி:- 21.11.2002 நண்பகல் 12 மணி
02. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 22 11 2002 நண்பகல் 12.00 மணி வரை
03. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி:- 22.11.2002 பிற்பகல் 2 00 மணி
04. கேள்விப் பத்திரங்களை அந்தந்த உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
05. மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம் கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை இவ் அலுவலககேள்விப் பெட்டியிலும் இணைப்பிரதியை 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் இல 29 செட்டித்தெரு, நல்லூர்' என்ற முகவரிக்கும் அனுப்பிவைக்க வேண்டும்.

| இல. | குத்தகை விபரம் | கேள்விப் பத்திரப் பணம் (வற் வரி நீங்கலாக) | கேள்வி வைப்பு | ஆகக்குறைந்த தொகை (வற்வரிநீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப - அலுவலகம்** | | | |
| 01. | அச்சுவேலி மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 2000 00 | 132000.00 |
| 02. | ,, ஆட்டிறைச்சிக் கடை | 150.00 | 500 00 | 24224.44 |
| 03. | வளலாய் தம்பாலை பொதுச் சந்தை | 50.00 | 100.00 | 907.50 |
| 04. | அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கர வண்டி தரிப்பிடம் உட்பட) | 250.00 | 2000.00 | 712408 90 |
| | **புத்தூர் உப - அலுவலகம்** | | | |
| 01. | புத்தூர் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 200.00 | 1000 00 | 78417.78 |
| 02. | வாதரவத்தை ,, | 100.00 | 250.00 | 3850.00 |
| 03. | புத்தூர் மத்திய சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 150.00 | 500.00 | 145 20.00 |
| 04. | ஆவரங்கால் மரக்கறிச்சந்தை | 100.00 | 250.00 | 1551. 00 |
| 05. | புத்தூர் பொதுச் சந்தை | 150.00 | 500.00 | 20872.50 |
| | **நீர்வேலி உப - அலுவலகம்** | | | |
| 01. | நீர்வேலி வடக்கு மீன் சந்தை | 100.00 | 250.00 | 3850.00 |
| 02. | ,, ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 1320.00 |
| 03. | ,, மாட்டிறைச்சிக்கடை | 150 00 | 500 00 | 13970.00 |
| 04. | ,, பொதுச் சந்தை | 100 00 | 250.00 | 1100.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | |
| 01. | கோப்பாய் வடக்கு சந்தை | 100.00 | 250.00 | 6991.12 |
| 02. | கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 150.00 | 500 00 | 41319.30 |
| 03. | இருபாலை சந்தை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 500 00 | 44000 00 |
| 04. | ,, மீன் சந்தை | 100.00 | 250.00 | 3536.50 |
| 05. | ,, சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2722.50 |
| 06. | கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 2722.50 |
| | **உரும்பிராய் உப - அலுவலகம்** | | | |
| 01. | உரும்பிராய்மாட்டிறைச்சிக்கடை | 250.00 | 2000.00 | 103950.00 |
| 02. | ,, ஆட்டிறைச்சிக்கடை | 150 00 | 500.00 | 27084.44 |
| 03. | ஊரெழு மாட்டிறைச்சிக்கடை | 150 00 | 500.00 | 14630.00 |
| 04. | ,, ஆட்டிறைச்சிக்கடை | 100.00 | 250.00 | 4400.00 |
| 05. | உரும்பிராய் மத்திய சந்தை | 200.00 | 1000.00 | 69696.00 |

குறிப்பு:- கேள்விப்பத்திரப்பணம் சித்திபெற்ற, கேள்வித்தொகை என்பவற்றிற்கு 20% வற்வரி செலுத்துதல் வேண்டும்.

**செ. குகதாசன்**
செயலாளர்

**பூ. குணசிங்கம்**
தவிசாளர்
வலி. கிழக்கு பிரதேச சபை,
நீர்வேலி

(சி-5251)

# வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் வேறுபட்டவை

### கொழும்பு பல்கலை விரிவுரையாளர் டாக்டர் அனிஸ்

(கொழும்பு)

தமிழ் பேசும் முஸ்லிம்கள், சிங்களம்பேசும் முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஒரு நாணயக் குற்றியின் இரு பக்கங்களாக கருத வேண்டும்.

வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளைப் பற்றி ஆராயும் போது வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் நலன்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட அரசறிவியல் விரிவுரையாளர் டாக்டர் எம். எஸ். அனீஸ் முஸ்லிம் கவுண்சிலின் கருத்தரங் கொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் பேசுகையில்; வடமாகாணத்தில் வாழும் முஸ்லிம்கள் தமிழர்களுடன் அன்னியோன்னியமாக வாழ வேண்டும்: வடக்கும்-கிழக்கும் இணைக்கப்பட வேண்டுமாயின் அதற்கு முன்பு முஸ்லிம்களுக்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட வேண்டும்.

வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை விடவும் கிழக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகள் வித்தியாசமானவை இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

# பேச்சு முடிவுகளை யாழ். மக்கள் வரவேற்பு

## கருத்து கணிப்பில் தெரிவிப்பு

(யழ்ப்பாணம்)

அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்கும் இடையில்தாய்லாந்தில் நடைபெற்ற முதலாவது சுற்றின் முதல் கட்டப் பேச்சு வார்த்தையின் முடிவுகளை யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அண்மையில் மாவட்ட கொள்கைகளிற்கான அரசநிறுவனத்தின் கீழ் இயங்கும் சமூக ஆய்வு நிறுவனம் மேற்கொண்ட கருத்து கணிப்பிலேயே இது விடயம் தெளிவாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற 82.4 வீதமான மக்கள் தாய்லாந்தில் நடைபெற்ற முதலாம் கட்டப் பேச்சு வார்த்தையை ஏற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், வடமராட்சி, வலிகாமம், நல்லூர் ஆகிய இடங்களில் இக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் வசிக்கின்ற 91 வீதமான மக்கள் இலங்கையின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தையின் மூலமே தீர்க்க முடியும் என கருத்து வெளியிட்டுள்ளனர் எனவும் அக் கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிக்கின்றன. (உ-10)

# தீவக மீனவர்கள் தொழில் புரிய கடற்படையினர் கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதிக் கடற்படையினர் கடற்றொழிலாளர்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகளை புதிதுபுதிதாக விதித்து வருவதாக தீவக மீனவர் சங்கங்கள் யாழ்ப்பாணம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் கடற்றொழிலுக்குச் செல்வதற்கான மீனவர் அடையாள அட்டை காண்பிக்கும் நடைமுறை உட்பட பல்வேறு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டிருந்தன.

ஆனால் நேற்று முன்தினம் முதல் கடற்றொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் அடையாளஅட்டையைக் கட்டாயம் கொண்டுவர வேண்டும் எனவும், மீனவர்கள் அனைவரும் கடற்படை முகாமுக்கு அருகாக வந்தே கடலில் இறங்க வேண்டுமெனவும் கடற்படையினர் மீனவர் சங்கங்களுக்கு அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்புத் தொடர்பாக மீனவர் சங்கங்கள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டன.

இதுவிடயம் குறித்து உடனடியாக தீவகக் கடற்படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் உறுதியளித்ததாக மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த)

# பாவிக்க முடியாதநிலையில் கொடிகாமம் பஸ் நிலையம்

### பிரயாணிகள் பெரும் சிரமம்

(தென்மராட்சி)

கொடிகாமம் பஸ் நிலையம் குன்றும் குழியுமாகக் காணப்படுவதனால் பஸ் பிரயாணிகளும், பொது மக்களும் பெரும் சிரமங்களை நாளாந்தம் அனுபவித்துவருகின்றனர்.

இதேவேளை, இந்தபஸ்நிலையத்தினைப் புனரமைப்பித்துத் தரும்படி கொடிகாமம் வணிகர் மன்றம் சாவகச்சேரி பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ். கண்டிவீதி திறக்கப்பட்டதன் பின்னர் கொடிகாமம் பஸ் நிலையம் முக்கியத்துவம் பெற்ற பஸ் நிலையமாக மறியுள்ளது தினமும்பல நூற்றுக்கணக்கானபஸ்பிரயாணிகள் இந்தபஸ் நிலையத்துக்கு வருகைதருகின்றனர்.

ஆயினும் பஸ்பிரயாணிகள் சௌகரியமாகத்தங்கிநின்று தமதுபஸ்பிரயாணத்தை மேற்கொள்ள முடியாதநிலை காணப்படுகின்றது. என வணிகர்மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-77)

# இலங்கையில் இன்னுமோர் சர்வதேச விமானநிலையம் அமைக்க வேண்டுகோள்

(கொழும்பு)

இந்த மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ள 2003ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் புதிய சர்வதேச விமான நிலையமொன்றை அமைக்க அரசு நிதி ஒதுக்க வேண்டும் என இலங்கை வாணிப சம்மேளனம்வேண்டுகோள்விடுத்துள்ளது

அரசு திறந்த வான் கொள்கையை அமுல்படுத்த வேண்டும் என்றும் அதன் கீழ்பிற நாட்டு விமானங்கள் எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி கொழும்பு வந்து போகக் கூடியதாக இருக்கும் எனவும் இதனால் உல்லாசப்பிரயாணிகளின் தொகை அதிகரிப்பதோடு விமான பொது சேவையும் விஸ்தரிக்கப்படக் கூடியதாக இருக்கும் எனவும் சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-7)

# புரிந்துணர்வு உடன்படிக்கையை வலுப்படுத்த இருதரப்பும் இணக்கம்

### இரண்டாம் கட்ட பேச்சு குறித்து நோர்வே அறிக்கை

(பாங்கொக்)

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கு இருதரப்பினரும் இணக்கம் கண்டுள்ளதாக நோர்வே அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் முதல் சுற்றின் இரண்டாம் கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து நோர்வே அரசாங்கம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இருதரப்பினரும் செய்து கொண்டுள்ள யுத்தநிறுத்தத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்லவும் திடசங்கற்பம் பூண்டுள்ளார்கள்.

நாட்டின் பாதுகாப்பு இவைகளுக்கிடையிலான ஒத்துழைப்பு வடக்கு-கிழக்கில் மனித உரிமைமீறல் போன்றவற்றைப் பலப்படுத்துவதில் அக்கறைகொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் இருதரப்பினரும் இணக்கம் கண்டுள்ளார்கள்.

கிழக்கில் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகிய மூன்று சமூகத்தினரின் அபிலாஷைகளையும் தேவைகளையும் நிறைவேற்றும் கடப்பாட்டைக் கொண்டுள்ளனர். யுத்தநிறுத்த உடன்படிக்கை அமுல்படுத்துவதில் உள்ள நடைமுறைச் சிக்கல் குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

இதனடிப்படையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுக்களும் மறுசீரமைக்கப்படவுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# அரசு திறந்த வான் கொள் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தினதும் சிவன் முன்பள்ளி மேலதிக வகுப்பறையினதும் கட்டடத் திறப்பு விழா இன்று பி.ப.3.00 மணியளவில் சுன்னாகம் கிழக்கு சனசமூக நிலையத்தில் நிலையத் தலைவர் க. கருணைநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினர்களாக இளைப்பாறிய ஆசிரியர் அ. தம்பித்துரை, இளைப்பாறிய தபால் அதிபர் வை. நவராசாவும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

### மண்டை தீவில் நிலை கொண்டுள்ள

# படையினரை வேறிடம் மாற்றவிரைவில்நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் அண்மைக் காலங்களில் குடியேறி பொது இடங்களில் வசித்து வரும் பொது மக்களை அவர்களது சொந்த வீடுகளில் குடியமர விரைவில் நடவடிக்கை எடுப்பதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. விநாயகமூர்த்தியின் பொதுச் செயலாளர் மகேந்திரராஜா உறுதியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம்பிற்பகல் 2 மணியளவில் மண்டை தீவுக்கு விஜயம் செய்த மகேந்திரராஜா பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் நேரில் சென்றும் அவர்களின் நிலைகளைப் பார்வையிட்டுள்ளார்.

தற்போது, 1,2,3,4,5 ஆம் வட்டாரங்கள் கடற்படையினரால் பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், இப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்து மீளக் குடியேறிய மக்கள் பொது இடங்களிலும், இரவல் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தியுள்ள இடங்களில் உள்ள சுமார் 75 ற்கும் மேற்பட்ட வீடுகளில் உள்ள கடற்படையினரை வேறு இடத்திற்கு மாற்றி இவ் வீடுகளை உரியவர்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

இதேவேளை அல்லைப்பிட்டி, மண்கும்பான் வேலணை ஆகிய பிரதேசங்களையும் சென்று பார்வையிட்டார். (உ-5)

# இலங்கையின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது

(கொழும்பு)

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா தொடங்குமானால் குவைத்திலுள்ள சுமார் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் இலங்கையர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் எச். ஏ. விமலசூரிய தெரிவித்துள்ளார்.

ஈராக் மீதான தாக்குதலை அமெரிக்கா நடத்துமானால் மத்திய கிழக்கில் குறிப்பாக குவைத்தில் பணிபுரியும் இலங்கையர்கள் கடல்மார்க்கமாகவோ, ஆகாயமார்க்கமாகவோ உடனடியாக இலங்கைக்கு அனுப்ப அந்நாட்டின் அதிகாரிகள் இணங்கியுள்ளனர். (உ-7)

### ஒருங்கிணைப்பு

# குழுக்கூட்டம்

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவு ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மு. ப. 10 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-252)

# மாளிகாவத்தை வன்முறை விபரங்களைத் திரட்டுமாறு அதிகாரிகளுக்கு பணிப்பு

(கொழும்பு)

மாளிகாவத்தை பகுதியில் ஏற்பட்ட வன்முறைச்சம்பவங்களின் போது சேதமாக்கப்பட்ட உடைமைகளின் விபரங்களை திரட்டுமாறுபாதுகாப்பு அமைச்சின் செயாலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் காலை மாளிகாவத்தை போதிராஜ மாவத்தை விளையாட்டரங்கில் முஸ்லிம், சிங்கள மதத் தலைவர்கள் கலந்துகொண்ட சமாதான மாநாட்டின் போதே இவ்வுத்தரவை பிறப்பித்துள்ளார்.

சேதமடைந்த உடைமைகளுக்கு நஷ்டஈடு வழங்கும் வகையில் கிராமசேவையாளர்கள் ஊடாக விபரங்களைத் திரட்டுமாறு கொழும்பு அரசாங்க அதிபருக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், உத்தரவிட்டார்.

இம் மாநாட்டில் உள்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க, அமைச்சின் செயலாளர் எம். என். யுனைட், கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எம். பி. ருக்மணி உட்பட உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (உ-8)

# கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

புதிய கல்விச் சீர்திருத்தம் பற்றி சமூக விழிப்புணர்வூட்டும் மாகாண நிலையிலான கல்விக் கண்காட்சி எதிர்வரும் 8,9,11 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

திருமலை சண்முகா இந்துக் கல்லூரி, திருமலை விக்கினேஸ்வரா வித்தியாலயம், ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, சென் சேவியர் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காலை 8.00 மணிமுதல் மாலை4.30 வரை இக் கண்காட்சி நடைபெறவுள்ளது. (உ-3)

# நம்பிக்கை கட்டிஎழுப்பப்படாத வரை பாகிஸ்தானுடன் பேசப்போவதில்லை

## வாஜ்பாய் உறுதிபடத் தெரிவிப்பு

(புதுடில்லி)

பரஸ்பரஉறவும் நம்பிக்கையும் ஏற்படாதவரை பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தப் போவதில்லை என இந்தியப்பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயும் கூட்டம் நேற்று புதுடில்லியில்இடம் பெற்றபோது பிரதமர் இதனைத்தெரிவித்தார்.

மேலும் பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு ஏற்ற சாதகமான சூழ்நிலையை பாகிஸ்தான் ஏற்படுத்திய பின்னரே பேச்சுவார்த்தைக்கு உடன்படுவேன் என்று குறிப்பட்டார்.

இதேவேளை பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பம் அற்றுப்போகும் வகையில் பாகிஸ்தான் தீவிரவாதிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் அமைந்துவிட்டதாகவும் இருநாடுகளிற்கும் இடையில் அமைதியை நிலைநாட்டும் வகையில் லாகூரிற்குச் சென்றிருந்த வேளை அங்கு கார்க்கில் ஆக்கிரமிப்பைத் தூண்டும் வகையிலேயே பாகிஸ்தான் தம்முடன் நடந்து கொண்டதாகவும் வாஜ்பாய் இச்சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இவ்வாறான முரண்பாடுகளுக்கிடையில் இருநாடுகளும் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது முடியாத காரியம். எனவே பாகிஸ்தான் முதலில் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியபின்னரே பேச்சு வார்த்தைக்கு உடன்படுவேன் என்று தனது முடிவை திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

(சு-2)

# பல்கேரிய உதவிப்பிரதமர் பதவி விலகப் போவதாக அறிவிப்பு

(சேர்பியா)

பல்கேரிய உதவிப்பிரதமர் கொஸ்ரடின் பஸ்கேல்வ் தனது பதவியை இராஜினாமாச் செய்யப் போவதாக அந்நாட்டுத் தேசியவானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இவ் இராஜினாமாக்கடித்தை பல்கேரியப்பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ள போதிலும் இன்னும் பிரதமருக்கு இது தொடர்பான அறிவிப்புக் கிடைக்கவில்லையென அரசாங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்கேரிய உதவிப் பிரதமர் கொஸ்ரடின் பஸ்கேல்வ் அந்நாட்டின் பிராந்திய அபிவிருத்தி அமைச்சராகவும் பதவிவகித்து வருகின்றார்

இவரது இராஜினாமாக் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கடந்த ஆண்டு யூலை மாதம் பதவியேற்ற பல்கேரிய அமைச்சரவையில் ஏற்படப்போகும் முதலாவது மாற்றம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

(சு-2)

# அல்கெய்டாவின் அடுத்த இலக்கு அவுஸ்திரேலியா?

(கன்பெரா)

அவுஸ்திரேலியா மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த அல்கெய்டா அமைப்பினர் திட்மிட்டுள்ளதாக அவுஸ்திரேலிய புல்னாய்வுத்துறை செய்தி வெளியிட்டுள்ளது.

இத் தாக்குதல் அமெரிக்கா மற்றும் இந்தோனேசியா மீது நடத்தப்பட்ட தாக்குதலை விட பெரியளவில் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை அடுத்து நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்துமாறு உத்தரவு பிறப்பக்கப்பட்டுளளது.

கடந்த மாதம் இந்தோனேசியாவில் பாலித்தீவில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் பலியானவர்களில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் அவுஸ்திரேலியர்கள் என்பதும், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் தமது பிரஜைகள் தென்கிழக்காசியா செல்லக் கூடாது என தடை விதித்ததும் இங்கு குறிப் பிடத்தக்கது.

(உ-3)

# பங்களாதேஷ் படைகள் மனித உரிமைகளை மீறுகின்றன

## அமெரிக்கா குற்றச்சாட்டு

(வாஷிங்டன்)

பங்களாதேஷ் இராணுவம் மனித உரிமைகளை மீறுகின்றன என அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

பங்களாதேஷில் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றதை அடுத்து அரசாங்கத்தால் தேசிய ரீதியில் ராணுவப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இவ் இராணுவப் பாதுகாப்பு அமுல படுத்திய நாளிலிருந்து 3000 பேர் கைது செயயப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்னும் விசாரணைக்காக நீதிமன்றில் ஆஜர் படுத்தப் படவில்லை.

இவர்களில் 12பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் என்ன காரணத்திற்காக கைது செய்யப் படடனர் என இராணுவம் அறிவக்கவில்லை என அமெரிக்க உட துறைப் பேச்சாளர் றிச்சர்ட் பௌசசர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கைது செய்யப் பட்டவர்கள் கொல்லப்படவில்லை, நோய்காரணமாகவே இறந்தனர் என அந் நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

(உ-3)




# சுமாத்திரா தீவில் பாரிய பூமி அதிர்ச்சி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சுமாத்திராதீவில் நேற்றுக்காலை பாரிய பூமி அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

இந்த பூமி அதிர்ச்சி 7.5 றிச்சர்ட் அளவில் பதிவாகியுள்ளதாக புவியியல் ஆய்வு நிலையம் அறிவித்துள்ளது.

அதனால் ஏற்பட்டுள்ள சேத விபரங்கள் பற்றி இன்னமும் தெரியவரவில்லை. இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட பாரிய பூமி அதிர்ச்சியை ஒத்ததாக இது காணப்பட்டது எனவும். அமெரிக்க புவியியல் நிலையம் தெரிவித்துள்ளது.

(2)

# பாக். சிறையிலுள்ள இந்திய மீனவர் விடுதலையாவர்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் கடற்பரப்பில் கடந்த ஆண்டு சட்டவிரோதமாக பிரவேசித்த 240 இந்திய மீனவர்களையும் மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்வதென பாகிஸதான் அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு பாகிஸ்தான் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 240 இந்திய மீனவர்களுமே அவர்களது 46 வள்ளங்களில் மீண்டும் தாயகத்திற்கு அனுப்பப்படவுள்ளனர்.

இதேவேளை இந்தியா23 பாகிஸ்தான் மீனவர்களையும் தொடர்ந்தும் சிறையில் வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

(சு-2)

# அமெரிக்க ஜனாதிபதி சூறாவளிப் பிரசாரம்

(வாஷிங்டன்)

அமெரிக்க பிரதிநிதிகள் சபைத்தேர்தலிற்கான சூறாவளிப்பிரசார நடவடிக்கையை ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யு புஷ் நேற்று ஆரம்பித்துள்ளார்.

இதே வேளை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் 10 மாநிலங்களில் இத்தேர்தலில் போட்டியிடுவதும் இவரது சகோதரர் புளோரிடா மாநிலத்தின் ஆளுநராக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(சு-2)

# புனிதப் போருக்குத் தயாராகுமாறு முஸ்லிம்களுக்கு அழைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவிற்கு எதிரான புனித யுத்தத்திற்கு தயாராகுமாறு அனைத்து முஸ்லிம் மக்ளுக்கும் பாகிஸ்தான் தீவிரவாத இஸ்லாம் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

இதே வேளை, தீவிரவாதிகள் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்காவில் வாழும் முஸ்லிம் மக்களிற்கு எதிரான யுத்தத்தில், அமெரிக்கா ஈடுபட்டு வருவதாக ஜமாஅத்தகுவாவின் இயக்கத் தலைவர் கபிஸ் அப்துல்சலாம் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

(சு-2)

அன்பு வாசகர்களே!

வலம்புரியின் வாரமலர்

சங்கு நாதம்

ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் வலம்புரி இணைக்கப்படாமல் தனித்து ரூ.12/= விலையில் பெற்றுக் கொள்ளுங்கள்

தினசரி வெளிவரும் வலம்புரியின் விலையில் மாற்றமில்லை

அறிஞர்களின் மனங்களில் நீங்காத இடம்பிடித்துவிட்ட சங்குநாதத்தை நீங்களும் வாசிக்கத் தவறாதீர்கள். இலங்கை பூராகவும் விற்கப்படும் சங்குநாதம் இனிமேல் உங்கள் உறவுகளுக்காக வெளிநாடுகளுக்கும் அனுப்பப்படுகின்றது.

சங்குநாதம்
வலம்புரியின் இணைப்பின்றி
ரூ. 12/= மட்டுமே.

# இன்று ஒரு தகவல்

## உடல் நலம் உங்கள் கையில்

அதோ போய்க் கொண்டிருக்கிறாரே! அவருடைய கையும் சுத்தம், வாயும்சுத்தம் என்றால் என்ன அர்த்தம். அவர் கையையும், வாயையும் சோப்புப் போட்டுக் கழுவிச் சுத்தமாக வைத்திருக்கிறார் என்றா அர்த்தம்? அப்படி இல்லை. வாய் சுத்தம் என்றால் சொன்ன சொல் தவறாதவர். கைசுத்தம் என்றால் லஞ்சம் வாங்காதவர். கைசுத்தமாக இருந்தால் யாரும் கவலைப்பட வேண்டியதில்லை. மருத்துவரீதியாகவும் இது உண்மை. இப்பொழுதுசாதாரணமாக உடம்பு சரியில்லையென்று டாக்டரிடம் போனால் நாக்கை நீட்டச் சொல்லிப் பார்ப்பதுவழக்கம் சிலஅமெரிக்க டாக்டர்கள் இப்போதெல்லாம் கையைக் கவனித்துப் பார்க்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

'கைகள் உடம்பிலே உள்ள கோளாறுகளைக் காட்டுகிற கண்ணாடிகள் என்றுஅவர்கள் சொல்கிறார்கள். நோயாளியினுடையஉடல் நிலையைமட்டுமல்ல, மனநிலையையும்கையிலிருந்து கண்டு பிடித்து விடலாம். ஒரு மனிதன் பேசுகிற பொழுது, அவன் சொல்வதை விட கையிலிருந்து அதிகமான விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடியுமாம். படபடப்பாக இருக்கிற ஒருவர் கையைப் போட்டுப் பிசைவது உண்டு. சிலர் 'கையில் என்னென்ன நகை போட்டிருக்கிறேன் பார்' என்பதைஅவர்களின் கையே நம்மிடம்சொல்லாமல் சொல்லிவிடும்.

ஒருவர் அரை குறையான சம்மதத்தோடு 'சரி! அப்படியே செய்கிறேன்' என்று வாயால் சொல்கிறார் என்றுவையுங்கள் அவர் அப்படிச் செய்யப்போவது இல்லைஎன்பதை அவருடைய கைகாட்டிவிடுமாம். பெரும்பாலான விபத்துக்களில் 'கை' தான் சேதமாகிறதாம்.

விரலில் நகம் இருக்கிறதல்லவா. அதைப்பார்த்துவிட்டு உடம்பை பற்றிப் பலவிஷயங்களைத் தெரிந்து கொள்ளலாமாம். ஒரு நோயாளிடாக்டரிடம் வந்தார், 'டாக்டர் ... எனக்கு உடம்பு ... என்று ஆரம்பித்தார்.' அதெல்லாம் கிடக்கட்டும்... முதலில் உங்கள் நுரையீரலில் கோளாறு இருக்கிறது..., உடனே ஒரு நுரையீரல் நிபுணரிடம் போங்கள்' என்றார் அவர்' இவர் என்ன மருத்துவரா? ஜோசியரா என்று வந்தவருக்குச் சந்தேகம் எப்படித்தெரிந்ததுஅவருக்கு? வேறு ஒன்றுமில்லை. அந்த நோயாளியினுடைய கைவிரல் முனைகள் குமிழ் மாதிரி பெருத்திருந்தது Club Finger என்று இதைச் சொல்வது. நகங்களில் மங்கலான நீல நிறமும் சாம்பல் நிறமும் தெரிந்சது அவ்வளவு தான். இதுபோன்று குழந்தைகளுக்கு இருந்தால் இதயத்தில் பிறவிக்கோளாறு என்று ஊகித்து விடலாம்.

பெரியவர்களுக்கு அப்படி இருந்தால் நுரையீரலில் கோளாறு என்று அர்த்தம், (Emphysema). சில சமயம் புற்று நோயாகக் கூடஇருக்கலாம். கையில் நிறம் மாறுவது ஒரு முக்கியமான அறிகுறி உள்ளங்கையிலே வழக்கத்துக்கு மாறாக மஞ்சள் நிறம் தெரிந்தால் என்ன அர்த்தம் தெரியுமா? இரத்தத்திலே கொலஸ்ட்ரால், டிரைகிளிசரைடு எல்லாம் அதிகமாகச் சேர்ந்து HyperlipoProteine'-mia என்கிற கோளாறு ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

ஒரு நோயாளியினுடைய கை அளவுக்கு மீறிச் சிவப்பாக இருந்தால் PulmarErythema என்கின்ற கோளாறு இருக்கலாம். கருவுற்ற பெண்களுக்கு உள்ளங்கை சிவந்து இருப்பதுண்டு. அதனால் தவறு இல்லை. ஆனால் மற்றைய பெண்களுக்கும் ஆண்களுக்கும்உள்ளங்கைஅளவுக்கு மீறி சிவந்து இருந்தால் ஈரலில் சிர்ரோசிஸ் என்கிற கோளாறு இருக்கலாம். விரல் நகத்தில் வெள்ளைப்புள்ளி இருந்தால்இரத்தத்தில் ஏதோ குறை. நகம்வெளுத்திருந்தால் இரத்த சோகை.

ஒரு பெண்மருத்துவர். அவரைச் சந்திப்பதற்குஒரு பெண் வந்தாள். கைகுலுக்கின சமயத்திலேயே அந்தப் பெண்ணுக்கு மூட்டு வாதம்-ஆரம்ப நிலை என்பதைக் கண்டு பிடித்து விட்டார்கள், எப்படி? பிடிவலுவில்லாமலே இருந்தது. உள்ளங்கை லேசாக ஈரமாக இருந்தது தோல் மெல்லியதாக இருந்தது. கதகதப்பாக இருந்தது. அவ்வளவு தான் நோயைக் கண்டு பிடித்தாயிற்று.

ஒரு பெரியவர். தன் பிள்ளையினுடைய கைவிரலைத் தொட்டுப்பார்த்து விட்டு, மகனே! சிகரெட்பிடிக்கிறாயா? என்று கேட்டார். கிடையாது! என்றான் பையன், 'மகனே! நீ பொய் சொல்லலாம்! உன் விரல் பொய் சொல்லாது. உன் விரலில் நிக்கோட்டினாலே ஏற்படுகிற மஞ்சள் கறை இல்லாமல் இருக்கலாம். ஆனாலும், உன் கைவிரல் நுனிகள் ஜில்லென்றிருக்கிறது. புகைப் பிடிப்பதனால் விரல் நுனியில் உள்ள இரத்தக்குழாய்கள் அடைபட்டுப் போகிறது. அதனால் இப்படி ஆகின்றது.

சிகரெட் உன் உடம்பைப் பாதிக்க ஆரம்பித்து விட்டது... உடனே நிறுத்திவிடு! நான் சொல்வதைக் கேட்கவில்லை யென்றாலும் உன் விரல் சொல்வதைக்கேள், என்று புத்தி சொல்லி விட்டு, 'அது சரி மகனே! தினமும் உனக்கு சிகரெட் எங்கேயிருந்து கிடைக்கிறது? என்று அப்பா கேட்டார். உங்கள் பாக்கெட்டிலிருந்து தான் அப்பா எடுக்கிறேன்' என்றான் பையன். புத்தி சொல்கிறவர்கள் இப்படி இருந்தால் கேட்கிறவர்கள் எப்படிசார் சரியாகக் கேட்பார்கள்?

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# இந்து மாநாட்டில் மாணவர்களும் ஆய்வுக் கட்டுரை சமர்ப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

அடுத்த ஆண்டு இந்து கலாசார அமைச்சு ஏற்பாட்டில் கொழும்பில் இடம்பெறவுள்ள உலக இந்து மாநாட்டில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க விரும்பும் மாணவர்கள் தமது விண்ணப்பத்தை சி. பத்மநாதன். செயலாளர் 248/2, காலி வீதி உலகஇந்து மாநாட்டுச் செயலகம் கொழும்பு என்னும் முகவரிக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இடை நிலை உயர் நிலை ஆகிய பிரிவுகளில் தலா மூன்று ஆய்வுக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளன.

இடைநிலையில் க.பொ.த, (உ/த) மாணவர்களும் உயர் நிலையில் கல்வியியல் கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் பங்கேற்க முடியும். (உ-9)

# புதிய வரவு செலவுத் திட்டம் நோயாளருக்குப் பெருந் தாக்கம்

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டம் மருந்துப்பொருள் வர்த்தகத்தின் மீது பாரிய சுமையை ஏற்படுத்தியுள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்ட சுங்கவரி, மேலதிகவரி, துறைமுக அறவீடு என்பனவற்றினால் மருந்துப்பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கு மேலதிகமாக 4.7 சத வீதம் அதிகரித்த செலவு ஏற்படும் என்று ஹாக்கோட்ஸ் நிறுவனத்தின் தலைவர் அகமத் றியாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பாதுகாப்பு அறவீடு நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, மருந்துப்பொருட்களின் விலைகள் 6.5 சதவீதத்தினால் குறைக்கப்பட்டு ஒரு மாதமே ஆகிறது.

இந் நிலையில், வரவு செலவுத் திட்டம் இறக்குமதி தீர்வையை 2 சதவீதத்தினாலும் சுங்கத் தீர்வை மீதான மேலதிக வரியை 20 சதவீதத்தினாலும், துறைமுக அறவீட்டை 0 1 சதவீதத்தினாலும் அதிகரித்துள்ளது.

ஒரே மருந்தில் 50 வகையானவை சந்தையில் போட்டியிடுகின்றன. இதனால், ஏற்கனவே சந்தையில் கடும் போட்டி நிலவுகின்றது. வரவு செலவுத் திட்டம் இதனை மேலும் சிக்கலாக்குகின்றது.

நோயாளிகளுக்கு மேலதிக சுமைகளைஏற்றாமல் அரசாங்கம் மருந்துப் பொருட்களை சகலவித தீர்வைகள், அறவீடுகளினின்றும் விலக்கிவிட வேண்டும் என்று அகமத் றியாஸ் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## முருகையனின் கலை இலக்கிய அனுபவ பகிர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

துண்டி இலக்கிய வட்ட ஏற்பாட்டில் கலாநிதி இ. முருகையனின் கலை இலக்கிய அனுபவப் பகிர்வும் கலந்துரையாடலும் இன்று பி.ப 3 00 மணிக்கு யாழ், பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

த.ஜெயசீலன் இந்நிகழ்வில் சிறப்புரையாற்றவுள்ளார். (உ)

## இராசி பலன்

13-11-2002
(ஐப்பசி 27, புதன்)
நவமி மு.இ. 8 33 வரை
சதயம் முழுவதும்
இராகுகாலம் - 12.07 - 1.37
நல்ல நேரம் - 4.37 - 6.07

**மேடம்**
நல்லவரவேற்பு, மன மகிழ்ச்சி, காரிய நன்மை, தொழில் லாபம்.

**இடபம்**
பணியாளர் உதவி, நல்ல செய்தி, தொழில் மேன்மை, சுபநிகழ்வு.

**மிதுனம்**
கடடுப்பாடு, உடல்உழைப்பு, வயிற்றுக் கோளாறு, வீண் பயம்.

**கடகம்**
போசனசுகம், எதிர்பாராத அச்சம், உறவினர் வெறுப்பு, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
திடீர் பயணம், சிநேகிதர் சந்திப்பு, முயற்சி பலிதம், பொருள் சேர்க்கை.

**கன்னி**
பகைவர் நேசம், செய் தொழில் விருத்தி, உடல் நலம், சந்தோசமான சம்பவம்.

**துலாம்**
வியாபார நன்மை, பிரயாண இடையூறு, உடல் நலக் குறைவு, புத்தி சாதுரியமான செயற்பாடு.

**விருச்சிகம்**
கல்வியில் ஆர்வம், பயந்த சுபாவம், அற்பர் உறவு, காரிய தாமதம்.

**தனுசு**
நல்ல முயற்சி, புதிய பொருள் சேர்க்கை, அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை.

**மகரம்**
வாக்கு கலகம், அதிக பிரயாசை, பண விரயம், மாதர் உதவி.

**கும்பம்**
ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், செல்வாக்கு, முயற்சி கைகூடும்.

**மீனம்**
உடல் சோர்வு, முயற்சி தாமதம், சயனசுகக் குறைவு, பிதா சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

## பகலில் ஈத் தொல்லை இரவில் நுளம்புக்கடி

### தொற்றுநோய் ஏற்படும் அபாயம்

(கோப்பாய்)

பொது இடங்களிலும், வீடுகளிலும் தற்போது பகலில் இலையான் தொல்லையும் இரவில் நுளம்பின் தொல்லையும் அவற்றின் பெருக்கமும் அதிகரித்து காணப்படுகின்றது.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகியுள்ளதால் இலையான்களால் தொற்று நோய்கள் பரவும் ஆபத்து அதிகரிக்கலாமென அஞ்சப்படுவதுடன் இவ் விடயத்தில் சுகாதாரப் பகுதியினரின் ஒத்துழைப்பு மிக முக்கியம் எனவும் பொது மக்கள் தரப்பில் தெரிவிக்கப் படுகின்றது. (உ-79)

## பல்கலைக்கழக மாணவனைக் காணோம் தாயார் முறைப்பாடு

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழக உயிரியல் பீடத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கடந்த 8 ஆம் திகதி தொடக்கம் காணாமல் போயுள்ளதாக பேராதனை பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எட்மன் மகேந்திரா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடாதிபதியின் அழைப்பை ஏற்று அங்கு சென்ற மாணவன் திரும்பி வரவில்லை என அவரின் தாயாரால் மேற்படி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-8)

## யாழ். குடாநாட்டின் அபிவிருத்தி பற்றி ஆராய பிரி. குழு இன்று வருகிறது

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சிக் குழுவின் இணைச் செயலாளர் நோஸ்பிபிரபுதலைமையிலான குழு வொன்று இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக் குழு யாழ். மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக ஆராய்வதுடன் மனித நேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் யாழ் அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து குடாநாட்டு அபிவிருத்தி தொடர்பாக ஆராயவுள்ளது. (உ-3)

## மாணவர் மோதலுக்கும் எமக்கும் தொடர்பில்லை ஜே. வி. பி. அறிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவன்மரணத்துக்கும்தமக்கும் எதுவித தொடர்பும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாணவனின் கொலைக்கும் ஜே.வி.பிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு எனவும் அரசியல் இலாபம் கருதியே இக் கட்சி இவ்வாறான மாணவர் கோஷ்டி மோதல்களை தூண்டி விடுகிறது எனவும் ஊடகங்களில் வெளியாகிவரும் செய்திகளை மறுக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

ஐக்கிய தேசிய முன்னணி அரசு இவ்வாறான சம்பவங்களுடன் எமது கட்சியைத் தொடர்புபடுத்தி கட்சிக்கு மாசு கற்பிக்க முனைந்து வருகிறது.

எனவே அரசின் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் எமது கட்சி தொடர்பாக வெளியிட்ட உண்மைக்கு மாறான கருத்துக்களை வாபஸ் பெற வேண்டும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களுக்கும் விசேட காப்புறுதித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டம் அடுத்த ஆண்டு முதல் அமுல்படுத்தப்படுமென விவசாய கால்நடை, சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ். பி. திஸநாயக்கா அறிவித்துள்ளார். (உ-3)

முஸ்லிம் மக்களுக்குத்

# தனி அலகு வழங்குவது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும்

## முன்னெச்சரிக்கை விடுக்கிறார் அமைச்சர் முகமட்

(கொழும்பு)

**கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கென தனியான ஒரு அலகு அமைக்கப்படுமாயின், அது பல்வேறு பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம். எச். முகமட் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்கு தொடர்ந்து பேசுகையில்; வடக்கு-கிழக்குப்பகுதிகளில் உள்ள முஸ்லிம் மக்கள் ஏனைய சமூகத்தினருடன் சேர்ந்துவாழத் தயாராக உள்ளனர்.

கிழக்கு மாகாண முஸ்லிம்கள் காலம் காலமாக தமிழ் மக்களுடன் சகோதரத்துவம் பேணி வாழ்ந்தது போலவே தொடர்ந்தும் வாழ விரும்புகின்றனர்.

70 சதவீதமான மக்கள் கிழக்கிற்கு வெளியே வசித்து வருவதனால் இவ்வாறு தனி அலகு ஏற்படுத்தப்படுவது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.

கிழக்கு மாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தென்பகுதி, மற்றும் மேல்மாகாணங்களில் நிரந்தர குடியிருப்பாளர்கள் ஆகியுள்ளனர்.

முஸ்லிம் மக்களுக்கு தனி அலகு கோருவதற்கு முன், மேற்படி பிரதேச முஸ்லிம் மக்களுடன் கலந்தாலோசனை நடத்தவும், கருத்தறியவும் சம்பந்தப்பட்டோர் தவறிவிட்டனர்.

அத்துடன், கிழக்கு மாகாணத்துக்கு வெளியே 70 சதவீதமான முஸ்லிம் மக்கள் சிங்களவர்களுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களினது நிலைமையையும் கருத்தில் கொள்ளவேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, இனிமேல் நடைபெறவிருக்கும் பேச்சுக்களில் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழும் 70 சதவீதமான முஸ்லிம் மக்களை கருத்தில் கொண்டு பொருத்தமான ஒரு நபரையோ அல்லது நபர்களையோ பிரதிநிதியாக இணைத்துக்கொள்ள வேண்டும் என அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அவர் அங்கு வேண்டுகோளையும் விடுத்திருந்தார்.

(உ-8)

## வெவ்வேறு விபத்துக்களில் ஐந்து பேர் காயம்

(மந்திகை)

கடந்த ஞாயிறன்று வடமராட்சியில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்த ஐவர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொண்டைமானாறு சந்தியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்குநேர் மோதியதில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வி. மகாலிங்கம் (வயது 66), வதிரியைச் சேர்ந்த பிரதாபன் (வயது12)

பருத்தித்துறை நகரப் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்தில் நெல்லிபடியைச் சேர்ந்த ஈ. கந்தவனம் வயது 53).

மந்திகையில் இடம்பெற்ற விபத்தில் புலோலியைச் சேர்ந்த தவக்குமார், கரவெட்டியைச் சேர்ந்த ஜெயப்பிரகாஸ் (வயது 17) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

(உ-23)

கல்விக் கட்டமைப்பை மாற்ற ஏதுவாக

## கல்விப் பணிப்பாளர்கள் விபரங்கள் திரட்டல்

(கொழும்பு)

மாகாணக் கல்வித்திணைக்களங்களிலும் வலயக் கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் கல்விப் பணிப்பாளர்களின் விபரங்களை மனித வள அபிவிருத்தி கல்வி மற்றும் கலாசார அமைச்சு திரட்டி வருகிறது.

தற்போது அமுலில் இருந்து வரும் வலயக்கல்வி அலுவலக முறைமையை மாற்றி, கல்விக் கட்டமைப்புக்களில் பாரிய மாற்றங்களை கொண்டுவரும் நோக்கிலேயே கல்விப் பணிப்பாளர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தின் 24 வலயக்கல்வி அலுவலகங்களிலும் கடமை ஆற்றிவரும் விடயரீதியான கல்விப் பணிப்பாளர்களின் விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு திட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் ஏ. விஜயானந்தமூர்த்தி சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களையும் கடிதம் மூலம் கோரியுள்ளார்.

(உ-8)

20 வருடங்களாக இலங்கையில் முழங்கிய

# துப்பாக்கிகள் ஓசைகளை இழந்துவிட்டன

# தப்பாமல் சமாதானத்தை நிலைநாட்டுவோம்

**லண்டன் சமாதான அறவழி பணியாளர் டயானா பிரான்சிஸ்**

(தென்மராட்சி)

உலகின் பல்வேறு நாடுகளிலும் இடம்பெற்றுவரும் நேரடி வன்முறைச்சம்பவங்கள் காரணமாக கோடிக்கணக்கான மக்களின் பெறுமதிமிக்க உயிர்கள் இழக்கப்பட்டுவருகின்றன. அத்துடன் நேரடி வன்முறைகள் காரணமாக எழுகின்ற பஞ்சத்தால் கோடிக்கணக்கான சிறுவர்கள் இறந்துவருகின்றனர். இந்தநிலை நிறுத்தப்பட உலகில் முரண்பாடுகள் நீங்கி சமாதான சகவாழ்வு மலர வேண்டும்.

இவ்வாறு லண்டனைச் சேர்ந்த சமாதான அறவழி பணியாளரான கலாநிதி திருமதி டயானா பிரான்சிஸ் தம்புல்லவில் நடைபெற்ற முரண்பாட்டு மாற்றத்துக்கான இரண்டுநாள் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டு உரையாற்றும்போது தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள முரண்பாட்டுக் கற்கைகளுக்கான பேர்கொவ் நிறுவனத்தினால் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சமூகத்தலைவர்களுக்காக நடாத்தப்பட்ட இப்பயிற்சிப் பட்டறையில் யாழ்ப்பாண மாவட்டத்தைச்சேர்ந்த பதினைந்துபேர் பங்குபற்றியிருந்தனர்.

கலாநிதி திருமதி டயானா பிரான்சிஸ் அங்குதொடர்ந்து குறிப்பிடுகையில்;

### துப்பாக்கிகளுக்கு ஓய்வு

இலங்கையில் கடந்த இருபதுவருடங்களாக முழங்கிய துப்பாக்கிகள் ஓசைகளை இழந்துவிட்டன. அவை மௌனத்தைப்பேணி வருகின்றன. துப்பாக்கிகளின் ஓசைகள் மீண்டும் எழக்கூடாது. சமாதானத்தை நிலைநாட்டுவதில் அரசியல் தலைவர்களின் பங்களிப்புகள்மட்டும் போதியதல்ல.

சமுதாயத்தில் வாழ்கின்ற நடுத்தர அடிமட்ட தலைவர்களும்மக்களும்இப்பயணத்தில் விசுவாசமாகச் சேர்ந்துசெயல்படவேண்டும். இது எமது பிரச்சினைஅல்ல எனப் புறந்தள்ளிவிட்டு இருக்கக்கூடியதுமல்ல. காலம் காலமாகஇடம்பெற்று வந்துள்ள இனத்துவ முரண்பாடுகளுக்கு உடனடியாகத் தீர்வுகளைக்காண்பது என்பதும் இலகுவானதல்ல.

எனவே, இலங்கையில் இருந்துவந்துள்ள முரண்பாடுகளைநீக்கி, நிரந்தரமான சமாதானத்தை நோக்கிய பணிகளில் அனைத்துத்தரப்பினரின் பங்களிப்பும் இடம்பெறவேண்டும் இம் முரண்பாட்டின் தீர்வுக்கு நாம் என்னசெய்யலாம் என்பது பற்றிச் சிந்திக்கவேண்டும்.

### எமது பங்குஎன்ன?

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் குறிப்பிட்ட சிலர்தான் செயல்படவேண்டும் என்ற தப்பானகருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். சமாதானத்தை ஏற்படுத்துவதில் 'நாம்' என்ன பங்களிப்பை வகிக்கின்றோம் என நாம் எண்ணவேண்டும் செயல்படவேண்டும்.

சமாதானத்தை உருவாக்குவதற்கு இணைந்து செயற்படவேண்டும். வன்முறைமூலம் சமாதானத்தை ஏற்படுத்திவிடமுடியாது. வன்முறைகள் இடம்பெற்ற ஏனைய நாடுகளில் சமாதானம் எப்படி ஏற்பட்டது? அதனை அடைவதற்குஅந்தந்த நாடுகளின் மக்கள்எத்தகைய பங்களிப்புகளைச்செய்தார்கள்? போன்ற அனுபவங்களையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். மக்களின் பங்களிப்புகள் இல்லாதநிலையில் சமாதானத்தைஉருவாக்க முடியாது.

மேலும், யுத்தத்தின்போது துப்பாக்கிகள் ஆட்சிசெய்தன ஆனால் சமாதானம் ஏற்பட்டதும் அங்கு அறவழிதான் ஆட்சிசெய்யும் இந்தநிலையை ஏற்படுத்தும் சீரியபணியில் நடுத்தர அடிமட்ட மக்களின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறவேண்டியது அவசியமாகும்என்று குறிப்பிட்டார்.

பூகோள ஆட்சிகள்பற்றிய கற்கைநிலையத்தின் ஆராய்ச்சியாளரான திருமதி. லிஸ் பிலிப்ஸன் அங்கு உரையாற்றும்போது,

### புதிய கோணத்தில் தீர்வு

இலங்கையில் நீடித்து நிலைத்து வந்துள்ள இனத்துவ முரண்பாடுகளை எவ்வாறு வெற்றிகரமாக, புதிய கோணங்களில் ஆராய்ந்து தீர்வுகளைக்காணலாம்எனச் சிந்திக்கவேண்டும். புதிய தொலைநோக்குப்பார்வை மிகவும் அவசியமாகும். மற்றவர்களைக் குறைசொல்கின்ற நிலையை மாற்றிக்கொண்டு நாம் என்ன செய்யலாம் செய்கின்றோம் என்பதுபற்றி தீர ஆலோசிக்கவேண்டும்.

வரலாற்றைமட்டும் பாடமாகக்கொள்வதால் இன்றைய பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டுவிடமுடியாது. இனத்துவ முரண்பாடுகளுக்குரிய தீர்வுகளைக் காணக்கூடிய ஆற்றலும் வல்லமையும் யாழ்ப்பாணத்தவர்களுக்கு உண்டு. அங்கு பல்வேறுபட்ட திறமையாளர்கள் இருக்கின்றார்கள் என்பதை நான் நன்குஅறிவேன்.

இனத்துவ முரண்பாடுகளுக்கான பிரச்சினைகளை ஆழமாக இனங்கண்டு, அவற்றினை எந்தவகையில் புதிய கோணத்தில் தீர்த்து நாட்டில் நிரந்தரமான சமாதானத்துக்கு வழிவகைகளை ஏற்படுத்திக்கொள்ளலாம் என்பதற்கு நாம் எமது திறமைகளையும், பட்டறிவுகளையும் பயன்படுத்த வேண்டும்எனக் கூறினார்.

(உ-77)

## வீடு பிரித்து திருட்டு

(மந்திகை)

ஓடு பிரித்து வீட்டினுள் இறங்கிய திருடர் அங்கிருந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ரேப்செற் ஒன்றைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த ஞாயிறன்று பருத்தித்துறை கொட்டடிப பகுதியில் உள்ள உ. ரஞ்சித்குமார் என்பவரது வீட்டில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, அன்றைய தினம் அயல் வீடுகளிலும் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இவை குறித்து பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(உ-23)

## முக்கோணத் தொடர் 13 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் முக்கோண தொடர் கிரிக்கெட் போட்டிகள் அடுத்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டிகள் ஜனவரி மாதம் 27 ஆம் திகதி முடிவடையவுள்ளன.

இதில் கலந்து கொள்வதற்காக இலங்கையணி டிசம்பர் மாதம் 11 ஆம்திகதி அவுஸ்திரேலியா செலவுள்ளது.

(உ-3)

யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாணத்தை மயான பூமி ஆக்கிய

# 95ம் ஆண்டு இடப்பெயர்வு -ஓர் மீள் பார்வை

**ஈழத்தமிழரது தேசிய வரலாற்றில் 1995 ஒக்டோபர் 30இல் பெரும் துயர நிகழ்வு ஆரம்பமானது. அந் நிகழ்வுகளை வண பிதா கலநித எட்வின் சவுந்தரநாயகம் எழுதிய ''அந்த இருள் படிந்த நாட்கள்'' (A War Diary From Jaffna) என்ற நூலில் இருந்து நினைவுகள் மீட்கப்படுகின்றன.**

**(ஆ-ர்)**

நவம்பர் மாதம் 12ம் திகதி ஞாயிறுக் கிழமை திருச்சிலுவைக் கன்னியர் மடத்தில் திருப்பலி நிறைவேறறினேன். அன்று மடத்தை மூடப்போவதாகவும் தங்கிநின்று சேவையாற்ற விரும்பியோரை வயோதிபர் இல்லத்தில் இருக்கும்படியும் கேட்டார்கள்.

ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த சகோதரி பேர்னடாவுக்கும் சகோதரி கெலனாவுக்கும் உள்ள நீண்டகால நட்பு துண்டிக்கப்பட்டது. சகோதரி கெலன் வயோதிபர் இல்லத்தில் இருக்கவும் சகோதரி பேர்னாடா கப்பலில் கொழும்பு போகவும் விருப்பம் தெரிவித்தார்கள்.

நாட்கள் முன்நோக்கி நகரநகர யுத்தமும் நகரை அண்மிக்கத் தொடங்கியது. நெருக்கமாக எறிகணைகள் விழுவது அதிகரிக்கத் தொடங்கியது. என்ன நடந்தாலும் குருமடத்தில் இருப்பேன் எனக் கூறிய மூத்த குரு ஒருவர் தனது தலைவரின் எண்ணத்துக்குப் பணிந்து மடுக கோவிலுக்குப் போகத் தீர்மானித்தார்.

அமலமரித் தியாகிகள் சபையின் கடைசிக் குழுவும் 12ம் திகதி மாலை 5:25 மணிக்கு சுவாமியார் வீதியிலிருந்து புறப்பட்டது. இன்னும் இருபத்தைந்து மணித்தியாலங்களுக்குள் இடம் பெற இருந்த கோர அழிவுகளிலிருந்து அவர்கள தப்பினார்கள். மார்கழி மாதம் 3ம் திகதி புனித பட்டம் பெற இருந்த அவர்களின் சபைத் தொடக்குனர் தன் விசுவாசமிக்க பணிவுள்ள பணியாளர்களுக்குச் செய்த புதுமையே இது!

வயோதிப இல்லத்தைச் சேர்ந்தவர்களின் மரணம் வழமைக்கு மாறான எண்ணிக்கையில் அதிகரிக்கத் தொடங்கியது. சில மணி நேர இடைவெளியில் நால்வர் இறநதனர். சவப்பெட்டியோ மரண அத்தாடசிப் படிவமோ இருக்க வில்லை. பூமியின் முகத்தே அவர்களின் வரலாறு இறுதியாக அழிக்கப்பட்டது. சடலங்கள் தள்ளுவண்டியில் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஒரு புதைகுழியில் இருவரை அடக்கம் செய்தோம்.ஒன்றாக வாழ்ந்த போது பேச மறுத்தவர்கள் இறுதியில் ஒரே புதைகுழிக்குள் அடங்கினர்.

இறைவா உமது வழிகள் புதுமையானது. உமது திட்டத்தை நாம் புரியமாட்டோம்.மனிதன் உமது திடடத்தை அறிய முற்படக்கூடாது போலும்!புனித சூசையப்பர் வயோதிப இல்லத்தலைவி இரண்டு சக்திகளுக்கு நடுவில். மடத்தை மூடிவிட, திருச் சிலுவை கன்னியர்கள், பணியைத் தொடர யாழ் ஆயர் இல்லத்தின் பேரூந்து வந்தது. ஏற்றக் கூடிய அளவு ஏற்றும்படி பணிக்கப்பட்டது.தலைவி இறுதி வரை சம்மதிக்கவில்லை. ஆயரின் விருப்பத்திற்கு எதிராகச் செல்ல விரும்பாது, இட மாற்றம் பற்றிப் பல சாக்குப் போககுகள் தெரிவித்தார்.இப்போது பேச நேரமில்லை. உடனடியாக ஆட்களை ஏற்றுங்கள் என்று பணிக்கப்பட்டது. இறுதி யில் நடமாடக் கூடிய எல்லோரும் ஏற்றப்பட்டனர். படுக்கையில் இருந்தவர்கள் விடப்பட்டனர். இவற்றை இரண்டு சகோதரிகள் ஆயருக்கு அறிவிக்கப் போனார்கள்.

இந்தத் தீர்மானம் ஆயருக்கு அவ்வளவு மகிழ்ச்சியளிக்கவில்லை என்றாலும் வேறு ஒன்றும் செய்யமுடியாத நிலை,யாரும் தனக்குத் துணையாக இல்லாததால் தனியாக விடப்பட்ட குருத்துவக் கல்லூரி உதவி அதிபர் ஆயர் இல்லத்துக்குப் போனார். உதவி இல்லாத இந்த வேளையில்,தொடர்ந்து தங்கி நின்று வயோதிப இல்லத்திற்கு உதவி செய்யத் தீர்மானித்தேன். துரை என்ற பணியாளரின் உதவியுடன் கொழும்புத்துறைக் குருத்துவக் கல்லூரியில் தங்கலாம் என முடிவு செய்தேன். துரை நல்ல நம்பிக்கையான உழைப்பாளி. தோற்றம் எளிமையானதாகிலும்

## அந்த இருள் படிந்த நாட்கள்

முயற்சியில் குறைந்தவராகக் காணப்படவில்லை.அனுமதிப் பத்திரங்களைப் பெற்று, சிலர் விட்டுச்சென்ற தங்கள் பொருட்களை எடுக்கப் பல வசதியீனங்கள் மத்தியில் யாழ் திரும்பி வந்தனர். அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு.

பயங்கர யுத்தமிருகம் அண்மித்து வந்து கொண்டிருந்தது. எறிகணைகள் எங்களுக்கு மிகவும் அணமையில் விழுந்து வெடித்தன. கரும் புகைமண்டலங்களைப் பல இடங்களில் காணக் கூடியதாக இருக்கிறது.

புனித சூசையப்பர் வயோதிப இல்லத்தில் இன்னும் சில இறப்புக்கள்.பிரேதப் பெட்டிகள் இல்லை. பிரேதங்களைக் கைவண்டியில் சவக்காலைக்கு கொண்டு செல்ல என்னால் செய்யக் கூடியதெல்லாம் செய்தேன்.

வயோதிப இல்லத்தினரின் வெளியேற்றம் பாசையூர் திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் உள்ளவர்களையும் பாதித்தது. இந்த மடத்தில் தங்கியிருந்த சிலர் கொழும்புத்துறைக் குருத்துவக் கல்லூரிக்கு இடம் மாறினர்.

முதற் செவ்வாய் அன்று பாசையூர் அந்தோனியார் கோவிலில் மக்களின் எண்ணிக்கையைப் போன்று நாய்களின் எண்ணிகையும் ஊளைச சத்தமும் கவனத்தை ஈர்த்தது. பொருட்கள் சிலவற்றை எடுக்கத் திரும்பி வந்த சிலரை பசியுடன் கோபமாக இருந்த சில நாய்கள் கடித்தன.

இரவு மிகப் பயங்கரமாய் இருந்தது. 8:45 அளவில் கொழும்புத்துறைப் பக்கமாக எறிகணைகள் விழத் தொடங்கின. அப்போது நான் குருத்துவக் கல்லூரி விறாந்தையில் செபமாலை சொல்லிக்கொண்டு இருந்தேன்.குருத்துவக் கல்லூரிக்கு அருகாமையில் எறிகணைகள் விழுந்து வெடிததன.எட்டு எறிகணைகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து விழுந்து வெடித்தன. கல்லூரியில் தஞ்சம் புகுந்த, நடக்க முடியாத ஊனமுற்றவரைப் பாதுகாபபாக, இன்னும் முடிவுறாத குருத்துவக் கல்லூரி கோவில் சீமேந்துக் கூரையின கீழ் இடம் மாற்றினோம். அந்த நேரத்தில கடவுள்தான் எமது பதுங்கு குழி. அவரே எங்கள் அரண்!

ஒவ்வொரு எறிகணையும் வெடிததவுடன் ஒவ்வொருவருடைய பெயர்களையும் கூப்பிட்டு உயிரோடு இருக்கறோமா என அறிந்து கொண்டோம். எறிகணைகளும் அதன் வெடிச்சத்தம் ஏற்படுத்தும் தாக்கமும் இரக்கமறறதாக இருந்தது.

ஏன் இந்த எறிகணைத் தாக்குதல்கள் போராளிகளின் நடமாட்டமோ அல்லது அவர்களின் முகாமகளோ எங்கள் அயலில் இருக்கவில்லை. எறிகணைகளின் நோக்கம் என்ன என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

வயோதிப இல்லத்தில் படுக்கையிலிருந்தவர்கள் மேல் எனது எல்லாக் கவலையும் இருந்தது. இப் பயங்கர இரவில் நான் வெளியே போக முற்படவில்லை. விடியக்காலையல் துவிச்கர வண்டியில் அங்கு போன பொழுது அவர்கள் இருக்கவில்லை. சம்பத்திரிசியார் கல்லூரிக்குப் போயிருக்கலாம் என்று எண்ணி அங்கு போன பொழுது அங்கும் காணவில்லை. ஆயரில்லம் சென்று ஆயருக்கு இச செய்தியைச் சொல்லும்படி வேண்டினேன்.

நான் திரும்பி வந்தபொழுது எறிகணைகள் விளைவித்த அழிவுகளைக காணக்கூடியதாக இருந்தது. சுவாமியார் வீதியில் பல நல்லின மாடுகள இறந்து காணப்பட்டன. அதிலொன்றை முழுமையாகவே நாய்கள் பசியாறின.கொழும்புத்துறைச் சிறிய குருமடத்தின் பிரதான கூரை, அமலஉறபவ இல்லச் சுற்றுமதில், வயோதிப இல்லத்தின் பின் பகுதி, குருத்துவக கல்லூரியின் தண்ணீர்த் தாங்கி,

**வணபிதா கலாநிதி**
**எட்வின் சவுந்தரநாயகம்**

இறையியல் பகுதிப் புதிய குளியலறைகள் எறிகணை சேதத்திற்கு உள்ளாகி இருந்தன.

வயோதிப இல்லத்து வளவுக்குள் எறிகணைகள் விழுந்து வெடித்ததால் படுக்கையில் இருந்தவர்களோடு முதியோர் இல்லம் அப்புறப்படுத்தப்பட்டது. அந்தச் சுற்றுப்புறத்தில் விடப்பட்ட ஒரே மனிதன் நான்தான். வயோதிப இல்லம் அப்புறப்படுத்தப்பட்டதால் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து இருக்க வேண்டும் என்ற எனது கடமையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். வயோதிப இல்லத்தில்தங்க அழைக்கப்பட்டபோது வாழ்வில் இவ்வளவு இளம் வயதிலா என எனக்குள் நினைத்து அதைச் சிலருடன் பகிர்ந்து கொண்டேன். (வளரும்)

3

# ''கிறிஸ்தவர்களும் இந்துக்களும் மனித உயிரின் மேன்மையை பேண அர்ப்பணிக்கப்பட்டவர்கள்''

## வத்திக்கான் நகரில் இருந்து தீபாவளி தின செய்தி

உலகின் முக்கிய 4 மதங்களையும் கொண்ட நாடு நமது நாட்டில் மதங்களுக்கிடையிலான ஒற்றுமை,அன்பு,புரிந்துணர்வு என்பன சிறப்பான விதமாக பேணப்பட்டு வருகிறது. குறிப்பாக இந்துமதத்தவர்களும்கத்தோலிக் மதத்தவர்களும் தமக்கிடையில் ஒரு நெருங்கிய உறவை வைத்திருக்கிறார்கள். கத்தோலிக்க மக்களின் திருவிழாக்களில் இந்து சமய மக்கள் பங்கெடுத்துக் கொள்வதும் இந்து சமய மக்களின் பெருவிழாக்களில் கத்தோலிக்க மக்கள் உணவுப் பரிமாற்றம் செய்து உறவினை வளர்த்துக் கொள்வதும் இன்றும் நடைபெறுகின்ற ஒரு உறவு முறையாகும்.

கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப் பீடமான ரோமாபுரி வத்திக்கான் நகரில் இருந்து இந்து மக்களின் வருடாந்த பெருவிழாவான தீபாவளி தினத்தையொட்டி ஆசி செய்தி வெளியிடப்பட்டு வருவதை நாம் அறிவோம். இது உறவினை இன்னும் வளர்க்கவும் ஆழப்படுத்தவும் உதவும் என்பதில் ஐயமில்லை. 'கிறிஸ்தவர்களும் இந்துக்களும் மனித உயிரின் மேன்மையை பேண அர்ப்பணிக்கப்பட்டவர்கள்' என்ற தலைப்பில் 2002ஆம் ஆண்டுக்கான தீபாவளி தின செய்தி ஒன்று வத்திக்கான் நகரில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது.

இன்று தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து வருகிறது. பல்வேறுபட்ட புதிய யுக்திகள் இத்தொழில் நுட்பத்தின்வழியாக கண்டுபிடிக்கப் படவும் கையாளப்படவும் தொடங்கியுள்ளன. இத்தொழில்நுட்பம் மனித வாழ்வை முன்னேற்றப் பாதையில் இட்டு சென்றாலும் அங்கும் சில ஆபத்துக்கள் உண்டு என்பது தெளிவாக இச்செய்தியில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது. மனித உயிர் பாதுகாக்கப்படவும் நீண்ட காலம் உயிர் வாழத்தக்கதாக செய்யப்படவும் கூடிய விதமாக தொழில்நுட்பம் வளர்ந்துள்ளதை சுட்டிக்காட்டுகின்ற வேளையில் மனித உயிரின் மாண்பையும் மனித உயிரின் பெறுமானத்தையும் இத் தொழில்நுட்பத்தின வளர்ச்சியில் நாம் இழந்து போகக் கூடிய ஒரு நிலை உண்டு. இதனை நாம் கவனமாக அணுகி கத்தோலிக்கர் இந்துக்கள் என்ற நிலையினைக் கடந்து மனித உயிரின் மாண்பையும், மதிப்பையும் பெறுமானத்தையும் விழுமியங்களையும் பாதுகாக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளியானது ஒளியின் விழாவாகும். நவம்பர் மாதம் 4ஆம் திகதி இந்து மத சகோதரர்கள் இவ்விழாவினை கொண்டாடுகிறார்கள். இவ்விழாவானது பொய்மையை எதிர்த்து உண்மை வெல்லும் என்பதையும் இருளினை எதிர்த்து ஒளி வெல்லும் என்பதையும் ஒரு புதிய ஆண்டின் ஆரம்பத்தையும் குறித்து நிற்கிறது.

மதங்களுக்கிடையிலான உரையாடலுக்கான திருத்தந்தையின் பேரவையின் தலைவர் கருதினால் பிரான்சிஸ் அரின்ஸ் வத்திககான் நகரில் இருந்து இச்செய்தியினை ஒக்ரோபர் மாதம் 29ஆம் திகதி வெளியிட்டுள்ளார்.

உலகெங்கும் வாழும் இந்து மத சகோதரர்களை என் அன்புக்குரிய இந்து நண்பர்களே! என விழித்து கிறிஸ்தவ திருவிழாக்களும் இருளில் இருந்து ஒளியையும், தீமையில் இருந்து நன்மையையும், பொய்மையில் இருந்து உண்மையையும், சாவில் இருந்து வாழ்வையும் வெற்றிகொள்ள விரும்புகின்ற மனித மனங்களின் வெளிப்பாடுகளாக இல்லையா? என்று கேள்வி எழுப்பி தம் செயதியை ஆரம்பித்துள்ளார்.

மனித உயிரின் இரகசியமானது கருவில் ஆரம்பமான கணப்பொழுது முதல் பிறப்பு வரை எல்லாப் படிமுறைகள் ஊடாகவும் செபத்தினாலும், சடங்கு செயல் முறைகளாலும் இந்து மதப் பாரம்பரியத்தில் கவனிக்கப்படடு வருகிறது. நாம் கிறிஸ்தவர்கள் கூட மனித உயிரிற்கு சிறப்பான மதிப்பளித்து வருகிறோம். விவிலிய நூலானது "மானிடரை நம் உருவிலும் நம் சாயலிலும் உண்டாக்குவோம்'' என இறைவன் மனிதனை தனது சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார் எனப் போதிக்கிறது. இந்த இறைவனின் அருட்கொடையானது கிறஸ்துவின் இரத்தத்தால் முத்திரையிடப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் இரத்தம் அவரின் அன்பு மிகுதியினால் ஒவ்வொரு மனிதர் மேலும் சிந்தப்பட்

**அருட்திரு**
**ரூபன் மரியாம்பிள்ளை**

டுள்ளது. இந்த வகையில் ஒவ்வொரு தனி மனிதரும் இறைவனின் பார்வையின் முன்னிலையில் விலை மதிப்பிற்குரியவர்களே.

தொழில் நுட்பம் நமது நாட்களில் மிக வேகமாக வளர்ந்துள்ளது. மனித உயிர் பாதுகாப்பாகவும் மகிழ்வாகவும் நீண்ட காலம் வாழக்கூடியதாகவும் தொழில் நுட்பத்தால் ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் தொழில்நுட்பமானது மனித வாழ்வின் தரத்தினை உயர்த்த எவ்வளவு தூரம் உதவியுள்ளது? என்ற கேள்விக்கும் தொழில் நுட்பம் மனித உயிரை மதிக்க உதவியுள்ளதா? என்ற கேள்விகளுக்கும் நாம் என்ன பதிலைக் கொடுக்க முடியும்.

தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் மனித உயிரானது என்றும் இல்லாதவாறு ஒருவித அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றது.

திருத்தந்தை 2ஆம் அருளப்பர் சின்னப்பரால் அழைக்கப்பட்ட சர்வதேச மதத் தலைவர்களின் சமாதானத்திற்கான தினம் ஜனவரி மாதம் 2002ஆம் ஆண்டு அசிசி நகரில் கொண்டாடப்பட்டபோது அங்கு கூடியிருந்த இந்து மதப் பிரதிநிதிகள் அவ் ஒன்றுகூடலை-இறைவனை தந்தையாகக் கொண்டு கூடியுள்ள மனித குடும்பத்தின் ஒற்றுமையின் சின்னம்-என குறிப்பிட்டதை நினைவு கூர்ந்தார்.இவ் ஒன்றுகூடலின் இறுதியில் எல்லா மதத் தலைவர்களும் தம் கரததில் இருந்த எரிகின்ற தீபங்களை ஒரு பொது மேடையில் வைத்து மனித உயிரின் மதிப்பையும் சமாதான முயற்சிகளையும் முன்னெடுப்போம் என உறுதி எடுத்தனர். திருத்தந்தை செல்லுங்கள் சமாதானத்தின் தீபத்தை தாங்கிக் கொண்டு உலகிற்குள் செல்லுங்கள்.உலகிற்கு ஒளி தேவை என்று அனுப்பி வைத்தார் எனத் தெரிவித்து கருதினால் பிரான்சிஸ் அரின்ஜியின் தீபாவளி தின செய்தி முடிவடைகிறது.

# ஐ. நா. தீர்மானத்தை ஈராக் நிராகரிக்குமா?

## நாடாளுமன்றில் கடும் எதிர்ப்பு

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை நிராகரிக்குமாறு, ஈராக் நாடாளுமன்ற வெளிவிவகாரத் துறைக் குழுவின் தலைவர் சலிம் கூபைஸி கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் குறித்து, நேற்று ஈராக் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் அவர் இக்கருத்தை வெளியிட்டார்.

இவ் விவாதமானது அந்நாட்டுத் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பானது.

**அச்சுறுத்த முடியாது**

இதில கலந்துகொண்டு பேசிய தேசிய நாடாளுமன்றப் பேச்சாளர் சாருன் ஹமாதி ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தில் பொய்கள் நிறைந்திருக்கின்றன என்றும், ஈராக்கை எவரும் அச்சுறுத்த முடியாது என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானம் குறித்த, தமது பதிலைத் தெரியப்படுத்த ஈராக்கிற்கு 7 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், ஐ நா: வின் தீர்மானத்தை நேற்று முன் கூடிய அரபு நாடுகளின் கூட்டமைப்பு வரவேற்றிருப்பதோடு, அந்தத் தீர்மானத்திற்கு ஈராக் கட்டுப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (பி)

உலக தரிசனம்

## பிரி. பிரதமரை உலுப்பி வரும் புலனாய்வுத் தகவல்கள்

### மக்கள் பாதுகாப்பு பற்றிக் கவலை

(லண்டன்)

பிரிட்டனின் முக்கிய நிலைகள் மீது பயங்கரவாத தாக்குதல்கள் இடம்பெறலாம்என்ற புலனாய்வு துறையின் தகவல்கள் தினமும் தம்மை உலுப்பி வருவதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் கவலை தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் அமெரிக்காவில் நடைபெற்ற செப்ரம்பர் 11 திகதிய தாக்குதல், பாலித்தீவு குண்டுத் தாக்குதல், மொஸ்கோ கலையரங்கு பணய நாடகம் போன்றவை பயங்கர வாத தாக்குதல்களிற்கு எல்லையே இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றன வென்று பிளயர் தெரிவித்துள்ளார்.

மேலும் பிரிட்டிஷ் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தம்மை தாமே பாதுகாக்கத்தயாரான நிலையிலும் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (பி-02)

### அமெரிக்காவுக்கு வெளியில் செயல்படும்

## பயங்கரவாத அமைப்புகள் மீது சிறப்பு தாக்குதல்

### அதிபர் புஷ் அனுமதி

(நியூயோர்க்)

அமெரிக்காவிற்கு வெளியே உள்ள பயங்கரவாத அமைப்புக்கள் மீது சிறப்புத் தாக்குதல்கள் நடத்துவதற்கான அனுமதியை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ டபிள்யூ புஷ்பல இராணுவ அதிகாரிகளிற்கு வழங்கியுள்ளார்.

ஜேர்மன் நாட்டு சி ஐ: ஏ: அமைப்பினர் இயக்கிய ஆள் இல்லாத விமான ஏவுகணை மூலம் தாக்கி 6 அல்கெய்தா அமைப்பினர் முன்பு கொல்லப்பட்டது தெரிந்ததே.

இதனையடுத்தே அமெரிக்க அதிபர் பல இராணுவ அதிகாரிகளிற்கு அமெரிக்காவுக்கு வெளியே செயல்படும் பயங்கரவாத அமைப்புக்கள் மீதான சிறப்புத் தாக்குதல்களை நடத்த அனுமதி வழங்கியுள்ளார். (பி-2)

## ஜனநாயக சமுதாய அமைச்சர்கள் மாநாடு

### தெ. கொரியாவில் ஆரம்பம்

(சியோல்)

ஜனநாயக சமுதாயங்களின் இரண்டாவது அமைச்சர்கள் மட்ட மாநாடு தென் கொரியா சியோல் நகரில் ஆரம்பமாகியுள்ளது. இதில் 110 நாடுகளின்1000ற்குமேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர்.

இந்த மாநாட்டின் போது ஜனநாயகத்தை பேணிப்பாதுகாப்பது, சந்தைப்பொருளாதாரத்தை மேம்படுத்துவது, பயங்கரவாத நடவடிக்கைகளைத் தடுத்து ஒழிப்பது போன்ற அம்சங்கள் பற்றி ஆராயப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-02)

### கிழக்கு அமெரிக்காவில்

## பாரிய சுழல் காற்று 30பேருக்கு மேல் மரணம்

(வாஷிங்டன்)

கிழக்கு அமெரிக்கமாகாணங்களை ரொனாடேர் என்ற பாரிய சுழல் காற்றுத் தாக்கியதில் முப்பதுக்கும் அதிக மானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

திடீரென்று சுழல் வெப்ப நிலை உயர்ந்ததோடு, தொடர்ந்து வந்த குளிர் கால நிலையால்இந்த சுழல் காற்று உருவானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து, ஒகாயு, ரெனோபி மற்றும் அனபாமா ஆகிய கிழக்கு கரையோர மாநிலங்களே இவ் அனர்த்தத்தால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த மாநிலங்களில் பலரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டதோடு, பல்லாயிரக்கணக்கான வீடுகள் மின்சார இணைப்பை இழந்துள்ளன.

ரெதோசை மாநிலத்தில் இந்த ரொனாடேர் சுழல் காற்று ஆறு மைல் நீள நிலப் பரப்பில் இருந்த அனைத்தையும் அள்ளிச் சென்றதில் அந்தப் பகுதி வெற்றுவெளியாகக் காட்சியளிக்கின்றது என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (பி)

### ஐ.நா. புதிய தீர்மானம்

## போர் ஒன்றுக்கு வழி சமைக்கும்

### ஈராக் பாராளுமன்றில் கருத்து

(பாக்தாத்)

ஆயுதக்களைவு தொடர்பாக ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவை முன்வைத்துள்ள புதிய தீர்மானம் போர் ஒன்றிற்கு வழி வகுப்பதாக அமைந்துள்ளது என்று ஈராக் பாராளுமன்றக் குழுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தீர்மானத்தை முற்றாக நிராகரிக்க வேண்டுமென சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்ஒருவர் தமது சக உறுப்பினர்களிற்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கிய ஜனாதிபதிசதாம் ஹுசைனால் கூட்டப்பட்ட அவசர கூட்டத்தின் போதே இரு கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. (பி 02)

### ரஷ்யாவில்

## பேரழிவை ஏற்படுத்தும் பழைய ஆயுதங்கள்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் அழிக்கப்படாமல் இருக்கும் இரசாயன ஆயுதங்களினால் பேரழிவுஏற்படக் கூடும் என்று ரஷ்ய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ரஷ்யாவில் அழிக்கப்படாமல் இருக்கும் பழைய ஆயுதங்கள் பயங்கரவாதிகளின் கைகளில் சிக்கிவிட்டால் பாரிய அழிவுகள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் உருவாகிவிடும் என்றும் ரஷ்யா இதனை தடுக்கும் வழிமுறை ஒன்றை மிக விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்றும் ரஷ்ய நிபுணர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (பி-2)

### ஈராக் தொடர்பான ஐ. நா. தீர்மானம்

## இத்தாலியில் 3 லட்சம் பேர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

(ரோம்)

ஈராக்குடன் போர் மூழ்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருவதை எதிர்த்து இத்தாலியில் 3 லட்சம் மக்கள் கலந்துகொண்டு மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியுள்ளார்கள்.

இத்தாலி புளோரன்ஸ் நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை ஐரோப்பிய சமூகக் கருத்தரங்கு என்ற அமைப்பு நடத்தியது.

ஈராக்குறித்து கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய நாடுகள் சபையால் நிறைவேற்றப்பட்ட புதியதீர்மானத்தினால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டகாரர்கள் ''போர்வேண்டாம்'' என்ற பதாகைகளை ஏந்திய வண்ணம் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இப் பேரணி ஒரு விளையாட்டரங்கைச் சென்றடைந்து அங்கு கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இவ்வார்ப்பாட்டப் பேரணிக்கு 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு வழங்கினர். (பி-4)

### ரயில் விபத்தில் 3 கூர்க்காக்கள் பலியாகினர்

நாகர் கோயில்அருகேயுள்ள ரயில் பாதையினை கடக்க முயற்சித்த வேளை பயணிகள் ரயில் மோதியதில் 3 நேபாளக் கூர்க்காக்கள் உயிரிழந்துள்ளனர்.

நாகர் கோயில்அருகேயுள்ள ரயில் பாதையினை கடக்க முயற்சித்த வேளை நாகர் கோயில் பகுதியில் இருந்து திருவனந்த புரம் நோக்கிச் சென்ற பயணிகள் ரயில் மோதியதால் இந்த விபத்து நேர்ந்தது எனவும் பாதையினை கடந்தவர்களின் அவதானக் குறைவே இவ் விபத்திற்கு காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பி-02)

## திருமணமுறிவை டயானா கடைசிவரை விரும்பவில்லை

### பிரிட்டிஷ் அரச குடும்ப உள்விவகாரம்

(லண்டன்)

இளவரசி டயானா முடிக்குரிய இளவரசர் சார்ல்ஸுடனான தனது திருமணம் முறிந்து போகக் கூடாதென்றே விரும்பினார், அதற்காக பெருமுயற்சிகளும் செய்தார். ஆனால் பலரது தலையீடுகளினால் அந்தத் திருமணம் முறிந்தே போய்விட்டது.

இளவரசி டயானாவின் மாளிகையில் பணியாற்றியவரான பால்பரெல் என்பவர் பத்திரிகைகளுக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

டயானாவின் வீட்டுப் பொருட்களைத் திருடினார் என்ற குற்றச் சாட்டில் வழக்கொன்றை எதிர் நோக்கிய பரெல் எலிசபெத்மகாராணியின் தலையீட்டினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இளவரசி டாயானா தமது திருமணம் முறிந்து போகாமல் இருக்க பெரு முயற்சிகள் மேற்கொண்டு வந்தார். ஆனால் அப் போதைய பிரிட்டிஸ் பிரதமர் ஜோன் மேஜர் கென்டிபரி, ஆர்ச் பிஷப் ஜோர்ஜ் கேறே முதலியவர்கள் அடிக்கடி தலையிட்டு அவரைக் குழப்பி வந்தார்கள். அதனால் திருமணம் முறிந்து போயிற்று என்று பரெல் கூறியுள்ளார்.

கென்னிங்டன் மாளிகையில் இடம் பெற்ற பல மறைமுக சம்பவங்களை பெரல் வெளியிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்துக்கும் டயானாவின் ஸ்பென்சர் பிரபு குடும்பத்துக்கும் இடையில் இருந்ததாகக் கூறப்படும் கருத்து முரண்பாடுகளையும் முறுகல் நிலைகளையும்பெரல்வெளியிட்டுள்ளார்.

இரு குடும்பங்களுக்குமிடையில் பிரிவுகள் மிக ஆழமாக நிலை கொண்டிருந்ததாகவும் டயானா அடக்கம் செய்யப்படுவதற்கு சற்று முன் வரை அவரது பூதவுடல் வைக்கப்பட்டிருந்த பேழையின் மீது இருந்த அரச சின்னமான கொடியை டயானாவின் சகோதரர் அகற்றினார் என்றும் அதற்கு பதிலாக தமது குடும்பக் கொடியை வைத்தார் என்றும் பரெல் தெரிவித்துள்ளார்.

வேல்ஸ் இளவரசர், இளவரசர் வில்லியம், இளவரசர் ஹாரி ஆகியவர்கள் முன்னிலையிலேயே இது நடைபெற்றதாகவும், 'இனிமேல் அவர் ஒரு ஸ்பென்சர் குடும்பத்தவர் என்று டயானாவின் சகோதரர் ஸ்பென்சர் பிரபு கூறியதாகவும் பரெல் தெரிவித்துள்ளார்.

இளவரசி டயானா சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன் பாரிஸில் கார் விபத்தில் மரணமானது தெரிந்ததே. (பி)

### இயம சங்ஹாரம்

நல்லூர் சிவன் கோவிலில் எதிர்வரும் 15ஆம்திகதிவெள்ளிக்கிழமை இயம சங்ஹாரத் திருவிழா இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் ஸ்ரீகைலாசநாதப் பெருமானுக்கு 1008 சங்காபிஷேகம், மார்க்கண்டேய சிவபூஜை ஆகியனவும் இடம்பெறவுள்ளன. (உ)

தக்கார் தகவிலர் என்பது
அவரவர்
எச்சத்தாற் காணப்படும்.

குறள்

# வலம்புரி

## சரியான கேள்வி!

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுக்கள் தாய்லாந்தில் நடைபெற்றுவரும் வேளை அரசதரப்புப் பிரதிநிதிகளிடம் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முக்கியமானதொரு கேள்வியை எழுப்பியுள்ளார்.

அதாவது 19 வது அரசியல் திருத்த சட்டமூலத்தில் தோல்வியுற்ற அரசாங்கத்தினால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் எடுக்கப்படுகின்ற தீர்வுத் திட்டங்களைப் பாராளுமன்றத்தில்நிறைவேற்றக் கூடிய, மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் உண்டா என்பதே கலாநிதி பாலசிங்கம் எழுப்பிய கேள்வியாகும்.

அரசும், விடுதலைப் புலிகளும் தாய்லாந்தில் எப்படித்தான் சமாதானப் பேச்சுக்களில ஈடுபட்டு இணக்கப்பாடு கண்டாலும், அவை பாராளுமன்றத்தில் மூன்றில இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும். இல்லையேல் அதில் எந்த அர்த்தமும் இல்லை. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இல்லையென்ற உண்மை 19 வது அரசியல் திருத்த சட்டத்தின் மூலம் உறுதியாகி விட்டது.

இந் நிலையில் விடுதலைப் புலிகளோடு அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சி வெற்றி பெற வேண்டுமாயின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவு தேவை என்ற உண்மை உணரப்பட்டுள்ளது.ஒட்டு மொத்தத்தில் இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வென்பது அனைத்து கட்சிகளின ஒற்றுமையில் தங்கியுள்ளது.

நாட்டில் எந்த கட்சி சமாதானத்தைக் காண்பது என்ற போட்டி நிலவியதனால் ஒரு கட்சி எடுக்கின்ற சமாதான முயற்சிகளுக்கு மற்றைய கட்சிகள் எதிர்ப்புக் காட்டின. இந் நிலைமை தொடர்ந்து வருகிறது.

இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில் துரதிர்ஷ்டவசமாக அரசபீடத்தில்நாட்டின்இருபிரதான கட்சிகள் அமர்ந்துள்ளன. அவை நல்ல முறையில் செயலாற்ற வேண்டும்.

# மனித பலவீனம்என்றுரைத்து உலக இன்பங்களில் திழைப்பவர் தெய்வ தண்டனைக்காளாவர்



## பரமபிதா காட்டிய பாதை

இந்த உலகத்திலே வாழ்கின்ற ஒருவரைப் போல இன்னொருவர் இல்லை. ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். பல ஒற்றுமைகள் இருந்தபோதும் பல வேற்றுமைகளும் இருக்கின்றன. சீடன் குருவுக்கு மேற்பட்டவன் அல்ல. குருவைப் போன்றிருப்பான் அல்லது, வேறு தனித்துவ திறமை கொண்டிருப்பான். ஒவ்வொருவரும் தாம் தாம் இருக்கைகளில் இருந்து அதிகாரம் செலுத்தலாம் ஆனால்யாருக்கு அநீதி இழைக்கப்படுகின்றது என்பதை மறந்து விடுகின்றார்கள். பரிசேயர்கள் தம்மால் சுமக்க முடியாத சுமைகளான சட்டங்களை மக்கள் மீது சுமத்தினார்கள். அவர்கள் வாழ்வும், அவர்களின் செயலும் வேறு பட்டிருந்தன. மக்கள் அவர்களை வெறுத்தார்கள். அவர்கள் வெளிவேடக்காரர்களாகி விருந்துகளிலும், செபக் கூடங்களிலும் முதலிடங்களைப் பிடித்துக் கொண்டார்கள். தமது சீட்டுப் பட்டங்களை அகலமாக்கி குஞ்சரங்களையும் பெரிதாக்கினார்கள். 'ராபி' என்று அழைக்கப்பட வேண்டுமென்று விரும்பினார்கள். இது உலகியல் வாழ்வின் ஒரு பக்கமாக இருந்தது.

### இயேசுவின் முன் மாதிரிகை

மனுவுரு எடுத்து வந்த நம் ஆண்டவரும், போதகருமான இயேசுவின வாழ்வும், வார்த்தையும் போதனைகளும் சமநோக்காகப் பார்க்கப்படக் கூடியதாக ஒத்தமைந்திருந்தன. விண்ணுலகில் உள்ள ஒருவரே எமக்கு தந்தை என்பதை இயேசு அழுத்தம் திருத்தமாகச் சீடர்களுக்கும், மக்களுக்கும் எடுத்துரைத்தார். உங்களுள் தலைவனாக இருக்க விரும்பியவன் முதலில் பணியாளன் ஆகட்டும் என்றார். மேலும் அவர் தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்.தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் (மத். 23: 12)என்று மொழிந்தார். தம்முடைய வார்த்தைகளுக்கு வாழ்வினாலே சான்று பகர்ந்தார். வாழ்வை வார்த்தையாகவும், மக்களோடு பகிர்ந்தார். இயேசு தம் சீடர்களுடைய பாதங்களைக் கழுவி தாம் பணியாளன் என்பதையும், தம் முடைய தாழ்மையையும் எண்பித்தார். பாவிகளை நேசிக்க வேண்டும். பகைவனையும் மன்னிக்க வேண்டும் என்று கூறியவர், அதனை சிலுவை மரத்திலிருந்த கள்வனையும், தம்மை வதைத்த கொடுமைக் காரர்களையும மன்னிக்குமபடி பரலோக தந்தையை வேண்டிக் கொண்டார். இயேசுவின் அன்பு இவ்வுலகில் வேறு யரும காட்ட முடியாத தியாக அன்பாகும். அடுத்தவரை வஞ்சம் தீர்க்க கங்கணம் கட்டி, சந்தர்ப்பம் பார்க்கிற இன்றைய காலங்களிலே தெய்வீக அன்பு எம்மைச் சிந்திக்க வைக்கிறது.

### போலிகளை உண்மையாக்கக் கூடாது

சடங்குகள், சம்பிரதாயங்களை, அர்த்தமுள்ள விதத்திலே செய்ய வேண்டும். இல்லையேல் சடங்குகளும் சம்பிரதாயங்களுமே மிஞ்சி, நாம் கண்டடைய வேண்டிய இறைவனைக் காண முடியாமல் போய் விடும். இயேசுவின் வார்த்தைகள் எம் பாதைக்கு விளக்காகவும், விளக்கமாகவும் இருக்கின்றன. அவற்றை ஒதுக்கி விட்டு அற்பமானவற்றை அடைய முயற்சிக்கக் கூடாது. ஆன்மீக வழிகாட்டிகளும் அக்கறை அற்றவர்களாக ஆகி விடாமல் விழிப்பாக இருக்க வேண்டும். வழிகாட்டுவோர் தம்மைத் தூய்மைக்குள் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் நீதியை கடைபிடிக்க வேண்டும். அதிகார தோரணையில் உலக நியாயங்களையும் புறக்கணித்து இறை நியாயங்களையும் புறக்கணித்து வாழ முற்படுவது எம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதாகும்.

### அழைப்பின் நிலைகளில் சான்று பகர வேண்டும்

திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவ வாழ்வுக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவரவர் நிலைகளிலேயே எம் பணிவாழ்வைப் பூரணத்துவம் அடையப் பாடுபட வேண்டும். மனிதன் பலவீனன் என்று சொல்லிக் கொண்டு உலக இன்பங்களை இரசியமாக அனுபவிக்க முற்படும் போது, இறை தண்டனைக்கு நிச்சயம் ஆளாக்கப் படுவோம். எம் வாழ்வின் மூலமாக நாம் கிறிஸ்துவின் சாட்சிகளாகத் திகழ வேண்டும். அதன் மூலம் மற்றவர்களும் கிறிஸ்தவ ஒளிக்கு வந்து சேர, நாம் எமது சிந்தனை, சொல்,செயல் வாழ்வினால் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ முனைப்புடன் செயற்படுவோம்.

**அன்ரனி பீற்றர்**

# பிறந்த திகதிக்கு பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

## சோதிடபலன்

(சென்றவாரத் தொடர்ச்சி)

### உடல் எண்-3உயிர் எண்8

3,12,21,30போன்ற தேதிகளில், பிறந்து, பிறந்ததேதி மாதம், வருடம் ஆகியவற்றைக் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமேயானால் குரு,சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவார். இவர்கள் சுமாரான உயரம்உடையவர்களாகவும், மிகுந்த கண்களை உடையவர்களாகவும், தைரிய சாலியாகவும் காட்சியளிப்பர்.

ஆரம்ப வாழ்க்கையில் பல் வேறு கஷ்டங்களை அனுபவித்த போதும்,படிப்படியாகச் சளைக்காமல் போராடி முன்னேற்றப் பாதையில் விரைந்து செல்வர். பல பொறுப்புகளைச் சுமந்து கொண்டு வாழும் இவர்கள் நேர்மையாக இருந்தாலும், பழிச் சொல்வரும். கலைஞானம் கொண்டஇவர்கள்தனித் திறமையாலும், கைத்தொழிலாலும்,இரும்பு சம்பந்தப்பட்ட தொழிலாலும்,வாகனங்களாலும் முன்னேற்றமடைவர்.சில நேரங்களில் இவர்களது தொழில் ஸ்தம்பித்துப் போய்விடும். ஆனால் பெயர் நன்றாக அமைந்து விட்டால் வளர்ச்சி தொடரும்.

உத்தியோகத்திலிருக்கும் சிலர் பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயரை அமைத்துக் கொண்டால் உத்தியோக உயர்வும், நல்ல முன்னேற்றமும் கிடைக்கும். உத்தியோகத்திலிருக்கும் இவர்களுக்கு வருமானம் போதவில்லலை என்பதால் வேறு ஏதாவது தொழிலில் ஈடுபடலாம் என்று எண்ணிக் கொண்டிருப்பர்.பெயர் சரியானபடி அமைந்திருக்குமேயானால் தொழிலில வெற்றி பெறுவது உறுதி.

எல்லா உலக விஷயங்களையும்தெரிந்திருக்கும் இவர் கள் எப்பொழுதும சுறுசுறுப்பாக காட்சியளிப்பர். ஆனால் ஒய்வெடுக்க வேண்டும் என்று நினைத்தால் சோமபேறியாகி விடுவர். சிலர் தொழிற்கல்வியால் உயர்வும் இன்னும் சிலர்கற்பனாசக்தியால் எழுத்தின் மூலம் உயர்வும் பெறுகின்றனர். பெயர் பொருத்தமானதாக அமையாவிட்டால் கோட்டு வழக்குகளும், உடலில் பெரும் வியாதிகளும் வந்துவிடும்.சிலநேரங்களில் இவர்கள் எதையோ இழந்தது போன்று காட்சியளிப்பர். தியானமன நிலை கொண்ட இவர்கள் திடீரென்று தன்னம்பிக்கையை இழப்பர். பிறரை எளிதில் நம்பாத இவர்கள் எதிலும் முன் ஜாக்கிரதையாகவே இருப்பர்.

பணச் செலவு செய்வதில் சிக்கனமாக இருக்கும் இவர்களுக்கு விரயச் செலவுகள் வரும். இதனால் இதைத் தடுப்பதற்குத் தெய்வீக வழிபாடுகளைக் கடைப்பிடிப்பர். பூட்டிய பூட்டை மூன்றுமுறை இழுத்துப பார்க்கும குணம படைத்த இவர்கள், தான் ஒரு சீர்திருத்தவாதியாகவாழ வேண்டும்என்று எண்ணுவர். இவர்கள் தனது பெயரைப் பிறந்த தேதி எண்களுக்குப் பொருத்தமானதாக அமைத்துக் கொண்டால் சிறப்பாக வாழலாம்.

### தொழில்

இவர்களுக்கு உலோகம் சம்பந்தமான தொழில்கள் அனைத்தும் நன்மைதரும். இஞ்சினியரிங், மோட்டார் வாகனம், இரும்பால், எழுத்தால் ஆன தொழில்கள், கண்டிராக்ட்கமிஷன் போன்றவற்றால் லாபம் அடைவர்.

### நோய்

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு, மூட்டுவலி வயிற்று

2ஆம் பக்கம் பார்க்க

**ஆர். ஐ. துரைமுருகர்**



## தினசரி தியானம்

### மனக் கண்ணாடி

கண்ணாடியில் தெரியும் உருவம் போலத்தான் இந்த உலகம் மனதில் பிரதிபிம்பமாக இருக்கிறது. மனம்தான் கண்ணாடி, கண்ணாடினய அகற்றிவிட்டால், உருவம் பொருளுடன் இணைந்துவிடுகிறது. அது போல மனம் ஆன்மாவுடன் இணையும் போது, உலகம் தனியான ஒருபொருளாக இராது. இவ்வுலகம்அனைத்தும் பிரம்மனேயன்றி வேறு அன்று எல்லாம் பிரம்மனின் எண்ணத்தால் தோன்றியவை, துயரங்களுக்கும், தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் காரணமாக மனம் இருக்கின்றது என்பதுதான் இதன் தாற்பரியம்.

சுவாமி சிவானந்தர்

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.



# புதிய இணைப்புக்களை வழங்குவதில் யாழ். ரெலிக்கொம் தீவிரமாக ஈடுபடும்

## புதிய முகாமையாளர் சரவணபவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மக்களின் தேவைகளை அறிந்து ரெலிக்கொம் நிறுவனம் புதிய தொலைபேசி இணைப்புக்களை வழங்கி வருகின்றது. இந்த வருட இறுதிக்குள் புதிய இணைப்புக்களை வழங்குவதில் யாழ் மாவட்ட ரெலிக்கொம அக்கறையுடன் செயற்படுமென்று யாழ் மாவட்ட ரெலிக்கொம் நிறுவனத்தில் புதிதாகப் பதவியேற்ற முகாமையாளர் என்.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- யாழ் ரெலிக்கொம் தனது வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி புதிய தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கு பாடுபட்டு வருகின்றது என வலம்புரிச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ரெலிக்கொம் நிறுவன கேபிள் இணைப்புக்களை பொருத்துவதற்கு வீதிகளில் வெட்டிய குழிகள் இன்னமும் புனரமைக்கப்படாமை குறித்து அவரிடம் கேட்டபோது, "செறாக் கம்பனியிடம்" அதற்குரிய பொறுப்பு ஒப்படைக் கப்பட்டிருப்பதாகவும் இன்னும் ஒரு சில மாதங்களில் வெட்டப்பட்ட குழிகள் புனரமைக் கப்பட்டு விடுமென்றும் கூறினார். (இ-6)

# யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று நடை பெற்றது

## புனரமைப்புப் பணிகுறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு, யாழ் அரச செயலகத்தில், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் எம்.பியுமான வீ. ஆனந்த சங்கரி தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தின் புனரமைப்பு அபிவிருத்திப பணிகள் குறித்து ஆராயப்பட்டது.

கடந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட அபிவிருத்தி புனரமைப்புத் தொடர்பான தீர்மானங்கள் குறித்தும் வேலைத திட்டங்கள் குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

யாழ் மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினர்களான அ.விநாயக மூர்த்தி, என். ரவிராஜ், கஜேந்தி ரகுமார், எம். கே. சிவாஜிலிங்கம் மற்றும் புனர் வாழ்வு அமைச்சின் செயலாளர் எஸ். குமாரதாசன், உள்ளூராட்சி உதவியாணையாளர் கிருஸ்ணசாமி, அரசாங்க அதிபர் எஸ். பத்மநாதன் ஆகியோர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

எனினும் அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவரும் அமைச்சருமான தி.மகேஸ்வரன் மற்றும் ஈ.பி.டி.பி பாராளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, என் மதுனராஜா ஆகியோர் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை கூட்டத்துக்கு செய்தி சேகரிக்கச் சென்ற பத்திரிகையாளர்கள் எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட வில்லை.

இதற்கு பத்திரிகையாளர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (இ-6)

## ஸ்கந்தவரோதய மைதானத்தில்

# உதைபந்தாட்ட மத்தியஸ்தர் மயங்கி விழுந்து மரணம்

(ஏழாலை)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும், இளவாலை ஹென்றிசியா கல்லூரிக்கும் இடையில் நடை பெற்ற உதைபந்தாட்டப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றியவர் அவ்விடத்தில் மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 4மணியளவில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெற்ற இப் போட்டிக்கு, மத்தியஸ்தராகக கடமையாற்றிய, மயிலனி சுன்னாகத்தைச் சேர்ந்த ஐ.செல்வராஜா (வயது 48) என்பவரே உயிரிழந்தவராவர்.

இரு கல்லூரி அணிகளும் இடைவேளைக்குப் பின்னர் ஆட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப நபர் சிறந்த விளையாட்டு வீரர் என்பதும், சிறந்த சைக்கிள் ஓட்ட வீரர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-12)

# நெடுந்தீவு பயணிகள் படகு நடுக்கடலில் தத்தளித்தது

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான். நோக்கி வந்து கொண்டிருந்த நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பயணிகள் படகு இயந்திரக் கோளாறு காரணமாக நேற்று நடுக்கடலில் தத்தளித்தது.

காலை 8மணிக்கு நெடுந்தீவிலிருந்து 200ற்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிக் கொண்டு குறிகட்டுவான் நோக்கி வந்து கொண்டிருந்த இப்படகு நயினாதீவு முனையை அன்மித்த போது இயந்திரக் கோளாறு காரணமாக நின்று விட்டது.

சில மணி நேரம் பரிய அலைகளின் மத்தியில் தத்தளித்துக் கொண்டிருந்த படகை 'காப்பாற்றுமாறு பயணிகளால் வெள்ளைக் கொடிகள் காட்டப்பட்டதுடன் மக்கள் பீதியடைந்தனர். இதனையடுத்து நயினாதீவு துறை முகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் ஸ்தலத்திற்கு விரைந்து படகை கட்டியிழுத்துக் கொண்டு குறிகட்டுவானை வந்தடைந்தது. (இ-5)

# பாதுகாப்புக் குழுவில் இருதரப்புத் தளபதிகள்

(பாங்கொக்)

நாட்டின் அபிவிருத்திட்டங்கள் தொடாபான குழுவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் சு.ப, தமிழ்ச்செல்வன் பூவண்ணன், பாலகுமார், மகேஸ்வரன் ஆகியோர் இடம் பெறவுள்ளனர்.

பாதுகாப்பு தொடர்பான உப குழுவில் அரச தரப்பில் இராணுவ உயர் அதிகாரிகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளும் இடம் பெறுவர்.

இந்த உப குழு எதிர்வரும் பத்தாம் திகதி ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் கூடி ஆராயவுள்ளது.

அதி உயர் பாதுகாப்பு வலயம் மீள் குடியேற்றம் தொடர்பாகவும் இந்தக்குழு முக்கியமாக ஆராயுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் குழுவில் முஸ்லிம் மக்கள் சார்பில் முன்னாள் எம்.பியும், கிழக்குப்பிராந்திய சிரேஷ்ட பொலிஸ்மா அத்தியட்சகராக இருந்தவருமான மஜீத் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

# சர்வதேச இந்து மத மாநாடு அடுத்தவருடம் யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச இந்துமத மாநாடு அடுத்த வருடம் மே மாதம் யாழ்ப்பாணத்தில் நடை பெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இது சம்பந்தமாக நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்து நாகரீகத்துறைத் தலைவர் பேராசிரியர் கோபாலகிருஷ்னஐயர் தலைமையில் ஆலோசனைக் கூட்டமும் கருத்துப்பரிமாற்றமும் இடம் பெற்றது.

இக்கூட்டத்தில் மாநாட்டை அடுத்த வருடம் மே மாதம் 2ந் திகதி முதல் 5ந் திகதி வரை நடத்துவதென்று திகதி நிர்ணயிக்கப்பட்டதுடன், அதற்கென ஓர் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக பேராசிரியர் ப. கோபாலகிருஷ்னஐயர், செயலாளராக சிவமகாலிங்கம், பொருளாளராக சதாசிவஐயர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (இ)

---

### தீர்வுத் திட்டம்....

குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இக்குழுவில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரும் மேலதிகமாக நியமிக்கப்படவுள்ளார். இவரது பெயர் விலாசம் பின்னர் அறிவிக்கப்படும் என புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அபிவிருத்தி தொடர்டபாக 8பேர் அடங்கிய குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இதில் அரச தரப்பில் நால்வரும் விடுதலைப்புலிகளின் தரப்பில் நால்வரும் இடம்பெறவுள்ளனர்.

அரச தரப்பில் நியமனம் பெறவுள்ள நால்வரில் முஸ்லிம்கள் சார்பில் இருவர் இடம் பெறுவர்.

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாகஅரசு தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ, புலிகள் தரப்பில் சு.ப தமிழ்ச் செல்வன் ஆகியோர் இடம்பெற

---

### பொதுத் தேர்தல் நடக்கும்...............

வேண்டும் என்று புலிகள் யோசனை தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

19வது திருத்தச் சட்ட மூலம் நிராகரிக்கப்பட்ட பின்னரும் முஸ்லிம் காங்கிரஸ் எம்பிக்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில் ஐ.தே.மு அரசாங்கத்தின் உறுதிநிலை பற்றி அன்ரன்பாலிங்கம் கேள்வி எழுப்பியதாகவும் அதற்கு பதிலளித்த அமைச்சர் பீரிஸ் தமக்குத் தமிழர் தமிழ்க் கூட்டமைப்பின் 15 எம்.பிக்களின் உறுதியான ஆதரவு இருப்பதால் அச்சமடைவதற்கு எதுவும் இல்லை என்றும் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்களின் தகராறுகளும் தீர்கப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் புலிகளின் ஆதரவு ஐ.தே.மு அரசுக்கு கிடைக்கும் என்று கூறிய பாலசிங்கம் கூட்டுச் செயலணிக்குழுவின் தலைமை பிரதமரின் கீழ் கொண்டு வரப்படாமல் சுயாதீனமான ஒன்றாக இருத்தல் வேண்டும்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல் பாலஸ்தீனம் மற்றும் கொசோவில் அமைக்கப்பட்டது போன்று அமைய வேண்டும் என்று கேட்டிருந்ததாகவும் தெரியவருகிறது.

இதனை அரசாங்கம் மறுத்தது. நோர்வே அமைச்சர் ஹெல்கீசன் பலஸ்தீனமும் கொசோவும் ஐ.நா. வின் ஆதரவு பெற்றவை. இலங்கையின் சூழ்நிலை வித்தியாசமானது எனத் தெரிவித்ததன் பின்னர் புலிகள் இறுதியில் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அறியப்படுகிறது. (இ)

---

### ஈ.பி.டி.பி உறுப்...

வெட்டியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு கால்களிலும் வாள் வெட்டுக்கு இல்கான பிரஸ்தாப நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

---

### பிரபாகரனுக்கு....

வார்த்தைக் குழுத் தலைவர் ஜீ.எல்.பீரிஸ் நீதிமன்றை அவமதிப்பது போன்றவகையில் கருத்துக் கூறியிருப்பதாகவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

பொ.ஐ.மு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் பேச்சுக்கள் தொடரும் என்று அன்ரன்

இரண்டு கால்களிலும் வாள் வெட்டுக்கு இல்கான பிரஸ்தாப நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து நெல் லியடிப் பொலிஸார் விசார ணைகளை மேற்கொண்டுள் ளனர்.

(இ-23)

கருத்துக் கூறியிருப்பதாகவும் சரத் அமுனுகம தெரிவித்தார்.

பொ.ஐ.மு அரசாங்கம் ஆட் சிக்கு வந்தாலும் பேச்சுக்கள் தொடரும் என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருப்பது பற்றி கருத்துத் தெரிவித்த அமுனுகம பொ.ஐ.மு. சமாதானப் பேச்சுக் களைத் தொடரும் எனவும் கூறி னார்.

(இ)

நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக அரசு தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்னான்டோ, புலிகள் தரப்பில் சு.ப தமிழ்ச் செல்வன் ஆகியோர் இடம்பெற வுள்ளனர்.

நேற்று நடைபெற்ற பேச்சு வார்த்தையின் போது பல முன் னேற்றகரமான முறையில் இரு தரப்பினரும் செயற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

ளின் தகராறுகளும் தீர்கப்பட்டு விடும் என்றும் அவர் தெரிவித்த தாக அறியப்படுகிறது.

தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் புலிகளின் ஆதரவு

## திருமலைக்......

அங்கு ஆயுதங்களும் தொலைத தொடர்பு சாதனங்களும், இருந்த மை கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதுடன் விடுத லைப்புலி உறுப்பினர்களும் கைது செய்யபபட்டனர். (ம-8)

நிலை வித்தியாசமானது எனத் தெரிவித்ததன் பின்னர் புலிகள் இறுதியில் அதனை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அறியப் படுகிறது. (இ)


# என்னைப் பற்றியும் எண்ணுவீர்களா?



## 'பெரியோரே.... என் பேச்சிற்கும் கொஞ்சம் காது கொடுங்களேன்!

''பு,க்களின் மென்மை போல் மிக மிக மிருதுவானது என் மனது அன்பையும் அணைப்பையும் மட்டுமே வேண்டி நிற்கும் எனக்கு உங்கள் அதட்டல்கள் அழுகையை மட்டுமே பரிசாகத் தருகின்றது.

அப்பாவும் அம்மாவும் மற்றப் பெரியோரும் தம்தம் கோபங்களுக்கு என்னை ஏன் தண்டிக்கிறார்கள்?.... அப்படி அவர்கள் அடிக்கும் போதும் அதட்டும் போதும் கலைந்து போயுள்ள என் கூந்தல் போலவே மனசும் குலைந்து போய் விடுகிறது!''

உங்கள் தண்டனைக்குள்ளாகும்
ஓர் மழலையின் மனதிலிருந்து

தொடர்புகளுக்கான முகவரி:-

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு,
அறை எண் - 30,
யாழ் போதனாவைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

'நாளைய சந்ததிக்காய் இன்றே சிந்திப்போம்'

வெளியீட்டு அனுசரணை
SC (UK)

தொலைபேசி - 021-2222261 EXT.274

[C/5211]






தாய்லாந்தில் அரச, புலிகள் தரப்பு பிரதிநிதிகள்


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 03.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.